திருப்பாவை

O2.2:4172x1,15
N02
118100

ஸ்ரீ

ஸ்ரீமதேராமாநுஜாயநம:

ஆண்டாள் திருவடிகளேசரணம்.

பெரியாழ்வார் திருமகளான

# ஸ்ரீ ஆண்டாள் அருளிச்செய்த

# திருப்பாவை.

பிரதிபத தாத்பர்யங்களுடன்

ஸ்ரீமத்தக்கி-திருமலை-லக்ஷ்மீந்ருஸிம்ஹ குமார
வித்வத்-கல்யாண-ஸ்ரீநிவாஸ தாதாசார்ய
ஸ்வாமிகளாலும்

ஸ்ரீமாந் - வித்வான் - காஞ்சீபுரம்
இராமசாமி நாயுடவர்களாலும்
பரிசோதிக்கப்பட்டு,

பத்தி-வேங்கட நாராயணசாமிநாயுடு பார்யை

பத்தி - மங்கவல்லித் தாயாரம்மாளால்,

C. N. பிரஸில் பதிப்பிக்கப்பட்டது.

சென்னை:

1902.

Registered copy right.

118190

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

இந்த கிரந்தம் வேண்டுமவர்கள் சென்னை சாவுகாரிபேட்டை அடிபோட்ட பிள்ளையார் கோவிலுக்கடுத்த விநாயகமுதலி வீதி 6 - நெ. பத்தி - ஸ்ரீராமாநுஜலு நாயுடு அவர்கள் வீட்டில் பெற்றுக்கொள்ளலாம்.



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# தனியன்கள்.

---

ஸ்ரீசைலேசதயாபாத்ரம் தீபக்த்யாதிகுணார்ணவம்
யதீந்த்ரப்ரவணம்வந்தே ரம்யஜாமாதரம்முநிம்

லக்ஷ்மீநாதஸமாரம்பாம் நாதயாமுநமத்யமாம்
அஸ்மதாசார்யபர்யந்தாம்வந்தே குருபரம்பராம்

யோநித்யமச்யுத பதாம்புஜயுக்மருக்ம
வ்யாமோஹதஸ்ததிதராணி த்ருணாயமேநே
அஸ்மத்குரோர்பகவதோஸ்ய தயைகஸிந்தோ:
ராமாநுஜஸ்யசரணௌ சரணம்ப்ரபத்யே

மாதாபிதாயுவதய ஸ்தநயாவிபூதிஸ்
ஸர்வம்யதேவநியமேந மதந்வயாநாம்
ஆத்யஸ்யந:குலபதேர் வகுளாபிராமம்
ஸ்ரீமத்ததங்க்ரியுகளம் ப்ரணமாமிமூர்த்நா

பூதம்ஸரச்ச மஹதாஹ்வய பட்டநாத
ஸ்ரீபக்திஸார குலசேகர யோகிவாஹாந்
பக்தாங்க்ரிரேணு பரகால யதீந்த்ரமிச்ராந்
ஸ்ரீமத்பராங்குச முநிம் ப்ரணதோஸ்மிநித்யம்.

# ஆண்டாள் திருநக்ஷத்ர தனியன்.

ஆஷாடேபூர்வபல்குந்யாம
துலஸீகாநநோத்பவாம்|
பாண்ட்யேவிச்வம்பராம்கோதாம்
வந்தேஸ்ரீரங்கநாயகீம்||

மங்களாசாஸநம் செய்தருளின

## திவ்யதேசங்கள்

௧. திருவரங்கம் பெரியகோயில்.
௨. திருக்கண்ணபுரம்.
௩. திருமாலிருஞ்சோலைமலை.
௪. ஸ்ரீவில்லிபுத்தூர்.
௫. திருவேங்கடம் (திருப்பதி.)
௬. திருவடமதுரை.
௭. திருத்வாரகை.
௮. திருவாய்ப்பாடி.
௯. திருப்பாற்கடல்.



ஸ்ரீ ஆண்டாள்

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ஸ்ரீ ஆண்டாள் வைபவம்.

திருப்பாவை என்னும் இந்த ப்ரபந்தத்தை அருளிச்செய்த ஆண்டாள் வைபவம் எப்படிப்பட்டதென்னில், "பார்வண்ணமடமங்கை" என்னும் பூமிப்பிராட்டி, பெரியாழ்வாருக்குத் திருக்குமாரத்தியாய் வந்து உலகத்திலுள்ளவர்களை உஜ்ஜீவிப்பிக்கத் திருவுள்ளங்கொண்டு, ஸ்ரீவில்லிபுத்தூரில்-கலியுகம் ௯௮-வதான நளவருஷம் ஆடிமீ சுக்லபக்ஷ சதுர்த்தி பூரநக்ஷத்திரத்தில் திருத்துழாய் வனத்தில் அவதரிக்க, ஸ்ரீ பட்டநாதரான பெரியாழ்வார் பார்த்து, மிக்க ஆச்சரியத்துடன் ஆநந்தித்து எடுத்துக் கொண்டு "கோதை" என்று திருநாமமிட்டு "திருமகள்போல வளர்த்தேன்" என்றபடி வளர்த்து வரும்போது, கோதாதேவியும் பெரியாழ்வார், வடபெருங்கோயிலுடையானுக்கு ஸமர்ப்பிப்பதற்காகக் கட்டிவைத்த திருமாலைகளைப் பிரதிதினமும், தான் அணிந்து கொண்டு, கண்ணாடியில் அழகுபார்த்து மறுபடியும் முன்போலவே, அந்தத் திருமாலைகளைச் செண்டாகச் சுருட்டித் திருப்பூங்குடலையில் வைத்துக்கொண்டுவர, ஆழ்வாரும் அந்தத் திருமாலைகளைப் பெருமாளுக்கு ஸமர்ப்பித்துக்கொண்டு வந்தனர். இப்படி நடந்துவருகையில், அதை ஒருநாள் ஆழ்வார்கண்டு கோபித்து அன்று அந்த மாலைகளை நீக்கி, வேறு மாலை கட்டிப் பெருமாளுக்கு ஸமர்ப்பித்தனர். அன்று இராத்திரி ஆழ்வார் ஸ்வப்நத்தில் பெருமாள் எழுந்தருளி, கோதைப்பிராட்டி அணிந்து அழகுபார்த்துவைத்த திருமாலையே தமக்கு மிகவும் உகப்பென்றும் இனியப்

படியே செய்யும்படிக்கும் நியமித் தெழுந்தருளினர். ஆழ்வார் விழித்துக்கொண்டு, பெருமாள் நியமநத்தை நினைந்து வியப்படைந்து "என்னை ஆண்டாள்" என்று கோதைப்பிராட்டி விஷயத்தில், விசேஷப்ரதிபத்திபண்ணி, அன்றுமுதல் பெருமாள் நியமநத்தின்படி ஆண்டாள் சூடிக்கொடுத்த மாலைகளையே பெருமாளுக்கு-ஸமர்ப்பித்துவந்தனர். இதனாலேயே ஆண்டாளுக்கு சூடிக்கொடுத்தாளென்னுந் திருநாமமுண்டாயிற்று.

இப்படிப்பட்ட வைபவத்தையுடைய ஆண்டாள் ஜ்ஞாநபக்தி விசேஷங்கள் அதிகரித்தவளாய் பகவத் குண சேஷ்டிதங்களில் ஈடுபட்டவர்கள் படும் தசையை யடைந்து பகவதநுபவ பரிவாஹ-ரூபமாகத் திருப்பாவையும், நாய்ச்சியார் திருமொழியும் உலகிலுள்ள யாவரும் சேவித்து உஜ்ஜீவிக்கும்படியாக அருளிச்செய்து, திருவரங்கத் தெம்பெருமானை யடையத் திருவுள்ளங்கொண்டு பதினாலு, திருநக்ஷத்ரங்கள் எழுந்தருளியிருந்து திருவரங்க நகரப்பன் கிருபையோடு அழைப்பிக்க, அங்கெழுந்தருளி, ஸமஸ்த ஜனங்கள் பார்த்துக்கொண் டிருக்கையிலேயே உடுத்த பட்டாடையும்-திருக்கையில் செங்குவளை மலரும்-திருநெற்றியில் கஸ்தூரித் திருநாமமும் பிரகாசிக்க, திருவடிகளில் சிலம்பும், சுந்தரமான வளையல்களும் ஒலிக்க, அன்னநடையுடன் உள்ளே பிரவேசித்து நாகபர்யங்கத்தை மிதித்தேறி ரங்கைச்வர்யமுடையவனான பெரிய பெருமானை யடைந்து அவனது திருவடிகளில் அந்தர்ப்பவித்து வாழ்ந்தனள்.

---

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# திருப்பாவை வைபவம்.

ஸ்ரீ பூமிப்பிராட்டியாருடைய அம்சமாய் பெரியாழ்வாரது திருநந்தவனத்தில் திருத்துழாயினடியில் ஒரு குழந்தையாக அவதரித்தருளின ஸ்ரீ ஆண்டாள், பெரியாழ்வாருக்குத் திருக்குமாரத்தியானவளாகையாலும், [illegible], ஆழ்வார் திருமகளாகையாலும், தானான தன்மையாலும், ஜ்ஞாநபக்திகள் [illegible] ஸம் இட்டுமாவினைப்போலே விளங்கிப் பருவம் நிரம்பினவும், "மானிடவர்க்கென்று பேசப்படில் வாழாத தன்மை" உடையவளாய் வடபெருங்கோயிலெம்பெருமானுடனே கூடி யநுபவிக்க எண்ணி, அது எண்ணியபடி கிட்டப் பெறுமையாலே பூர்வம் கண்ணன், கோபிமார்களுடன் கூடி யநுபவித்ததைத் தானு மநுபவிக்கைக்கு ப்ராப்தியில்லாமையாலும் தானாகவே சென்று கண்ணனும் கோபிகைகளும் கூடியிருந்த யமுனைத்துறையையும், அவனிருந்த கோவர்த்தனத்தையும் கோகுலத் [illegible] பார்த்து அதற்கும் சக்தியில்லாமையாலும் அந்த ஸ்தலத்தில் கண்ணனோடு கூடவிளையாட [illegible] மைகளிலே அடைக்கப்பட்டிருந்த [illegible], வர்ஷமில்லாமற்போகவே வர்ஷத்துக்காக [illegible] நோற்கும்படி பெரியோர்களாலே நியமிக்கப்பட்டவர்களாய்த் தங்கள் நோன்புக்கு வேண்டிய [illegible] கொடுத்து நிறைவேற்றுபவன் [illegible] கொண்டு, திருவுள்ளத்தில் [illegible] பண்ணுவதற்காக ஒருகால் ஸங்கல்பித்ததேயன்றி [illegible] விழித்துக்கொண்டவர்கள் உறங்குவாரையெழுப்பி [illegible] அவர்களுங்கூடி மற்றவர்களை யெழுப்ப இப்படி யாவருங்கூடிச் சென்று [illegible] ஸந்நிதானத்தை யடைந்து, தங்களுக்கு வேண்டிய பறையைக் கேட்டுப் பெற்றுத் தங்கள் மனோரதத்தை நிறைவேற்றிக்கொண்ட விஷயங்களை, ஆண்டாள் பாவனையினாலே செய்து முடித்து பகவதநுபவத்தைப் பெற்றாளென்பது இந்தத் திருப்பாவையின் அபிப்ராயம்.



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# தனியன்கள்.

நீளாதுங்கஸ்தநகிரிதடீஸுப்தமுத்போத்ய க்ருஷ்ணம்
பாரார்த்யம் ஸ்வம் ச்ருதிசதசிரஸ்ஸித்தமத்யாபயந்தீ
ஸ்வோச்சிஷ்டாயாம் ஸ்ரஜி நிகளிதம் யா பலாத்க்ருத்ய புங்க்தே
கோதா தஸ்யை நம இதமிதம் பூய ஏவாஸ்து பூய:

நீளா - நப்பின்னைப் பிராட்டியினுடைய, துங்க - உன்னதமான, ஸ்தந - ஸ்தநங்களாகிற, கிரி - பர்வதங்களின், தட - ப்ரதேசத்தில், ஸுப்தம் - உறங்கும், க்ருஷ்ணம் - கிருஷ்ணனை, உத்போத்ய - எழுப்பி, ஸ்வம் - தன்னதான, ச்ருதிசத - வேதஸஹஸ்ரங்களினுடைய, சிர: - சிரஸ்ஸுக்களில், ஸித்தம் - ப்ரதிபாதிக்கப்படுகிற, பாரார்த்யம் - பாரதந்திரியத்தை, அத்யாபயந்தீ - அத்யாபநம் பண்ணினவளாய், ஸ்வ - தன்னாலே, உச்சிஷ்டாயாம் - சூடிக்களைந்த, ஸ்ரஜி - புஷ்பமாலையினாலே, நிகளிதம் - கட்டப்பட்ட கிருஷ்ணனை, பலாத்க்ருத்ய - பலாத்காரித்து, யா கோதா - எந்த கோதைப்பிராட்டி, புங்க்தே - அநுபவித்தாளோ, தஸ்யை - அவள்பொருட்டு, இதம் இதம் - இந்த இந்த, நம: - நமஸ்காரம், அஸ்து - உண்டாகக்கடவது, பூய ஏவ - மறுபடியும், அஸ்து - உண்டாகக்கடவது, பூய - மீட்டும், அஸ்து - உண்டாகக்கடவது. (எ - று.)



அன்னவயற்புதுவை யாண்டாளரங்கற்குப்
பன்னு திருப்பாவை பல்பதியம் — இன்னிசையால்
பாடிக்கொடுத்தாள் நற்பாமாலை பூமாலை
சூடிக்கொடுத்தாளைச் சொல்.

(இ - ள்) அன்னம் - அன்னங்கள் சஞ்சரிக்கிற, வயல் - கழனிகளையுடைய, புதுவை - ஸ்ரீவில்லிபுத்தூரில் அவதாரஞ்செய்தருளின; ஆண்டாள் - ஸ்ரீ ஆண்டாள், அரங்கற்கு - பெரிய பெருமாளுக்கு, பன்னு - யாவரும் புகழ்ந்து சொல்லும், திருப்பாவை - திருப்பாவையென்னும், பல்பதியம் - பலபாட்டுக்களை, இன் - இனிமையான, இசையால் - இசையினாலே, பாடிக்கொடுத்தாள் - அருளிச்செய்து அளித்தாள்; பூமாலை - புஷ்பமாலையை, சூடி - தான் அணிந்துகொண்டிருந்து, கொடுத்தாளை - (பிறகு) கொடுத்தவளை, சொல் - நீ அநுஸந்திப்பாயாக. (எ - று.)

சூடிக்கொடுத்த சுடர்க்கொடியே தொல்பாவை
பாடியருளவல்ல பல்வளையாய் — நாடிநீ
வேங்கடவற்கென்னை விதியென்ற விம்மாற்றம்
நாங்கடவா வண்ணமே நல்கு.

(இ - ள்) சூடிக்கொடுத்த - புஷ்பமாலையைச் சூடிக்கொண்டு பிறகு அதை எம்பெருமானுக்குக் கொடுத்தருளின, சுடர்க் கொடியே - பிரகாசமுடைய கொடி போன்றவளே, தொல் - பழமையான, பாவை - திருப்பாவையை, பாடி, அருளிச்செய்து, அருளவல்ல - கொடுக்கவல்ல, பல்வளையாய் - பலவகைப்பட்ட வளையல்களை யணிந்தவளே, நாடி - ஆராய்ந்து, நீ வேங்கடவற்கு என்னை விதியென்ற - திருவேங்கடமுடையானுக்கு என்னை விதிப்பாயென்று நீ அருளிச்செய்த, இம்மாற்றம் - இவ்வார்த்தையை, நாம் - நாங்கள், கடவா வண்ணமே - அதிக்ரமியாதபடி, நல்கு - உபகரித்தருளவேண்டும். (எ - று.)



ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# திருப்பாவை.

மார்கழித்திங்கள் மதிநிறைந்தநன்னாளால்!
நீராடப்போதுவீர் போதுமினோ நேரிழையீர்!
சீர்மல்குமாய்ப்பாடிச் செல்வச்சிறுமீர்காள்!
கூர்வேற்கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன்
ஏரார்ந்தகண்ணி யசோதையிளஞ்சிங்கம்
கார்மேனிச்செங்கண் கதிர்மதியம்போல்முகத்தான்
நாராயணனே நமக்கேபறைதருவான்.
பாரோர்புகழப் படிந்தேலோரெம்பாவாய். (

(அ - கை.) இந்த, நோன்புக்கு ஒரு கால நேர்பட்டதே யென்று சாற்றிக்கொண்டாடி கிரு ஷ்ணாநுபவத்துக்கு உரியவர்களை அழைக்கிறார்கள்.

(இ - ள்.) மார்கழி - மார்கழி யென்னும், திங் கள் - மாதத்தில்; மதி - சந்திரனால், நிறைந்த - பூர்ண மான, நல் நாள் ஆல் - நல்லதினமாயிருக்கிறது; நேர் - விலக்ஷணமான, இழையீர் - ஆபரணங்களையுடைய வர்களே! சீர் - ஐச்வர்யம், மல்கும் - நிறைந்த, ஆய் ப்பாடி - திருவாய்ப்பாடியிலுள்ள, செல்வம் - பகவத் ஸம்பந்தமாகிய ஸம்பத்தையுடைய, சிறுமீர்காள் - இளம்பருவமுடைய பெண்களே! கூர் - கூர்மையான,





வேல் - வேலாயுதத்தினாலே, கொடும் - கொடுமை யான, தொழிலன் - செய்கையை யுடையவரான, நந்தகோபன் - நந்த கோபருக்கு, குமரன் - குமார னும், ஏர் - அழகு, ஆர்ந்த - பொருந்திய, கண்ணி - கண்களை யுடையவளான, யசோதை - யசோதைப் பிராட்டிக்கு, இளம் சிங்கம் - சிங்கக்குட்டி போன்ற வனும், கார் - மேகம்போன்ற, மேனி - திருமேனியை யுடையவனும், செம்கண் - சிவந்தகண்களையுடையவ னும், கதிர் - சூரியனையும், மதியம் - சந்திரனையும், போல் - சமானமான, முகத்தான் - முகத்தையுடைய வனுமான, நாராயணனே - ஸ்ரீமந்நாராயணனே, நமக்கே - அவனருளை யெதிர் நோக்கும் நமக்கே, பறை - வேண்டியபலனை, தருவான் - கொடுப்பான், பாரோர் - பூமியிலுள்ளவர்கள், புகழ - கொண்டாடும் படி, படிந்து - பிரவேசித்து, நீராட - (நோன்புக்கு) நீராடுவதற்காக, போதுவீர் - வருமவர்களே, போதுமின் - வருவீர்களாக. (எ - று.)

மார்கழி மாதத்தில் சந்திரனால் நிறைந்த நாளா யிருக்கின்றது. சிறந்த ஆபரணங்களையுடையவர்களே! ஐச்வர்யம் விசேஷித்த திருவாய்ப்பாடியில் செல்வம் நிறைந்த சிறு பெண்களே! கூர்மையான வேலாயு தத்தினாலே, கொடிய செய்கையை யுடையவரான நந்தகோபருக்குக் குமாரனும், அழகு பொருந்திய கண்களையுடைய யசோதைப் பிராட்டிக்கு இளஞ்சிங் கம் போன்றவனும், மேகம்போன்ற திருமேனியை யுடையவனும், சிவந்த கண்களையுடையவனும், சூரி யனையும் சந்திரனையும்போன்ற திருமுகத்தை யுடை யவனுமான ஸ்ரீமந்நாராயணனே அவனருளை யெதிர்

நோக்கும் நமக்கே புருஷார்த்தத்தைக் கொடுப்பான்; (ஆகையால்) பூமியிலுள்ளவர்கள் கொண்டாடும்படி பிரவேசித்து நமது நோன்புக்கு நீராடும்பொருட்டு வருமவர்களே! வருவீர்களாக என்பது தாத்பர்யம்.

வையத்துவாழ்வீர்காள்! நாமும்நம்பாவைக்குச்
  செய்யுங்கிரிசைகள் கேளீரோ; பாற்கடலுள்
பையத்துயின்ற பரமனடிபாடி
  நெய்யுண்ணோம்பாலுண்ணோம் நாட்காலேநீராடி
மையிட்டெழுதோம் மலரிட்டுநாம்முடியோம்
  செய்யாதனசெய்யோம் தீக்குறளைச்சென்றோதோம்
ஐயமும்பிச்சையு மாந்தனையுங்கைகாட்டி
  உய்யுமாறெண்ணி யுகந்தேலோரெம்பாவாய். (உ)

(அ-கை.) நோன்புக்குத் தாங்கள் செய்ய வேண்டியவற்றைச் சொல்லுகிறார்கள்.

(இ-ள்.) வையத்து-பூமியில், வாழ்வீர்காள்-வாழுமவர்களே, நாமும்-நாங்களும், நம்-நமது, பாவைக்கு-நோன்புக்கு, செய்யும்-செய்யவேண்டிய, கிரிசைகள்-காரியங்களை, கேளீர்-கேட்பீர்களாக; (அவை யெவையென்னில்) (நாம்-நாங்கள்.) பாற்கடலுள்-திருப்பாற்கடலில், பைய-மெல்லென, துயின்ற-யோகநித்திரைசெய்த, பரமன்-யாவருக்கும் மேலானவனுடைய, அடி-திருவடிகளை, பாடி-துதித்து, நெய்-நெய்யை, உண்ணோம்-புசிக்கமாட்டோம்; பால்-பாலை, உண்ணோம்-புசிக்கமாட்டோம்; நாட்காலே-விடியற்காலத்திலே, நீராடி-ஸ்நாநஞ்செய்து, மை இட்டு-(கண்களுக்கு) மையிட்டு, எழுதோம்-அலங்கரிக்க மாட்டோம்; மலர் இட்டு-(கூந்தலில்) புஷ்பங்களை வைத்து, முடி



யோம்-அணிய மாட்டோம்; செய்யாதன-பெரியோர் அநுஷ்டியாதவைகளை, செய்யோம்-செய்ய மாட்டோம்; தீ-தீமையான, குறளை-கடுஞ்சொற்களை, சென்று-போய், ஓதோம்-சொல்லமாட்டோம்; ஐயமும்-யோக்கியர்களுக்குக் கொடுக்கு மவற்றையும், பிச்சையும்-சந்நியாசிகளுக்கும் ப்ரஹ்மசாரிகளுக்கும் கொடுக்கு மவற்றையும், ஆந்தனையும்-ஆனவரையில், கைகாட்டி-கொடுத்து, உய்யும் ஆறு-உஜ்ஜீவிக்கும் மார்க்கத்தை, எண்ணி-சிந்தித்து, உகந்து-சந்தோஷிப்போம். (எ-று.)

பூமியில் வாழுமவர்களே! நாங்களும் நமது நோன்புக்குச் செய்ய வேண்டிய காரியங்களைக் கேட்பீர்களாக; (அவையெவை யென்னில்) நாங்கள் திருப்பாற்கடலில் மெல்லென அறிதுயிலமர்ந்த பரமனுடைய திருவடிகளைத் துதித்து, நெய்யையுண்ணோம்; பாலையுமுண்ணோம்; விடியற்காலத்திலே நீராடி, கண்களுக்கு மையிட்டு அலங்கரிக்க மாட்டோம்; கூந்தலில் புஷ்பங்களையிட்டு முடிக்க மாட்டோம்; பெரியோர்கள் அநுஷ்டியாதவைகளைச் செய்யமாட்டோம்; தீய கடுஞ்சொற்களைச் சென்று சொல்லமாட்டோம், ஐயத்தையும் பிச்சையையும் கூடியவரையில் கொடுத்து, உஜ்ஜீவிக்கும் மார்க்கத்தை சிந்தித்துச் சந்தோஷிப்போம். என்பது தாத்பர்யம்.

ஓங்கியுலகளந்த வுத்தமன்பேர்பாடி
  நாங்கள் நம்பாவைக்குச் சாற்றிநீராடினால்
தீங்கின்றிநாடெல்லாந் திங்கண்மும்மாரிபெய்து
  ஓங்குபெருஞ்செந்நெ லூடுகயலுகள

பூங்குவளைப்போதிற் பொறிவண்டுகண்படுப்பத்
தேங்காதேபுக்கிருந்து சீர்த்தமுலைபற்றி
வாங்கக்குடம்நிறைக்கும் வள்ளற்பெரும்பசுக்கள்
நீங்காதசெல்வம் நிறைந்தேலோரெம்பாவாய். (௩)

(அ - கை.) நோன்பை யனுஷ்டித்தால் வரும் ப்ரயோஜநத்தைச் சொல்லுகிறார்கள்.

(இ - ள்.) ஓங்கி-வளர்ந்து, உலகு-மேல்கீழ் உலகங்களை, அளந்த - திருவடிகளாலே அளந்தருளின, உத்தமன் - புருஷோத்தமனுடைய, ~~பேர்~~ - திருநாமங்களை, பாடி - புகழ்ந்து, நாங்கள் —, நம் - நம்முடைய, பாவைக்கு - நோன்புக்கு, சாற்றி - சொல்லிக் கொண்டு, நீராடினால் - நீராடுவோமானால், தீங்கு - (வியாதி, பயம், வெள்ளக்கேடு, வறட்கேடு முதலிய) தீமைகள், இன்றி - இல்லாமல், நாடெல்லாம் - தேசமெல்லாம், திங்கள் - மாதந் தோறும், மும்மாரி - மூன்று மழைகள், பெய்து - வருஷித்து, ஓங்கு - உயர்ந்திருக்கும், பெரும் - விசேஷமான, செந்நெல் - நல்ல நெற்பயிரின், ஊடு - இடையில், கயல் - கயல் மீன்கள், உகள - துள்ளவும், பூம் - அழகிய, குவளைப் போதில் - குவளை மலரில், பொறி - புள்ளிகளையுடைய, வண்டு - வண்டுகள், கண்படுப்ப - உறங்கவும், தேங்காதே - சலியாமல், புக்கு - பிரவேசித்து, இருந்து —, சீர்த்த-பருத்த, முலைபற்றி - முலையைப் பிடித்து, வாங்க - இழுக்க, குடம் - குடங்களை, நிரப்பும்-நிறையும்படி பண்ணும், வள்ளல் - பெருந்தன்மையையுடைய, பெரும் - பெரிய, பசுக்கள்-பசுக்களும், நீங்காத - அழியாத, செல்வம் - ஐசுவர்யமும், நிறைந்து-நிறையும். (எ - று.)



வளர்ச்சியை யுடையவனாய் உலகங்களை யெல்லாம் திருவடிகளாலே அளந்தருளின புருஷோத்தமனுடைய திருநாமங்களை நாங்கள் நமது நோன்புக்காக, புகழ்ந்து சொல்லிக்கொண்டு நீராடினால், தீங்கு இல்லாமல் தேசமெல்லாம் மாதமும்மாரி பெய்து ஓங்கியிருக்கும் விசேஷமான செந்நெற் பயிரினிடையில் கயல்மீன்கள் துள்ளவும் அழகிய குவளைமலரில் புள்ளிகளையுடைய வண்டுகள் உறங்கவும் சலியாமற் பிரவேசித்திருந்து பருத்த முலையை அணைத்திழுக்கக் குடங்களை நிரப்பும் பெருந்தன்மையையுடைய பெரிய பசுக்களும் நீங்காமலிருக்கும் செல்வமும் நிறையும் என்பது தாத்பர்யம்.

ஆழிமழைக்கண்ணா வொன்றுநீகைகரவேல்
ஆழியுட்புக்கு முகந்துகொடார்த்தேறி
ஊழிமுதல்வனுருவம்போல் மெய்க்கறுத்துப்
பாழியந்தோளுடைப்பற்பநாபன்கையில்
ஆழிபோல்மின்னி வலம்புரிபோல்நின்றதிர்ந்து
தாழாதேசார்ங்க முதைத்தசரமழைபோல்
வாழவுலகினிற் பெய்திடாய்நாங்களும்
மார்கழிநீராட மகிழ்ந்தேலோரெம்பாவாய். (௪)

(அ - கை.) வருணனை நோக்கி நாங்கள் நீராடுவதற்காக நீ இன்னின்னபடி செய்யவேண்டுமென்கிறார்கள்.

(இ - ள்.) ஆழி-கம்பீரமான, மழைக்கு - மேகத்துக்கு, அண்ணா - தலைவனான வருணனே, ஒன்று - நாங்கள் சொல்லுவதொன்றை, நீ —, கைகரவேல் - மறுக்கவேண்டாம். (அது என்னவெனில்) ஆழியுள் - சமுத்திரத்தில், புக்கு - பிரவேசித்து, முகந்து—

கொடு - நீரை மொண்டு கொண்டு, ஆர்த்து - முழக்கமிட்டு, ஏறி - மேலேயெழுந்து, ஊழிமுதல்வன் - ஸ்ருஷ்டிக்கு ஆதியிலிருக்கும் காரண பூதனுடைய, உருவம்போல் - திருமேனியைப்போல, மெய் - சரீரம், கறுத்து - கருமையடைந்து, பாழி - வலிமையுள்ள, அம் - அழகிய, தோளுடை - திருத்தோள்களையுடைய, பற்பநாபன் - தாமரைப்பூத்த உந்தியையுடையவனுடைய, கையில் - திருக்கையிலிருக்கும், ஆழி போல் - சக்கரத்தைப்போல, மின்னி - பிரகாசித்து, வலம்புரி போல் - பாஞ்சஜந்யத்தைப்போல, நின்று —, அதிர்ந்து - சப்தித்து, தாழாதே - தாமதஞ்செய்யாமல், சார்ங்கம் - சார்ங்கமென்னும், அவனது வில்லானது, உதைத்த - விட்ட, சரமழை போல் - பாணவருஷம்போல, வாழ - யாவரும் வாழும்படிக்கு, உலகினில் - உலகத்தில், நாங்களும் —, மகிழ்ந்து - சந்தோஷித்து, மார்கழி நீராட - மார்கழி நீராடுவதற்காக, பெய்திடாய் - பெய்வாயாக. (எ - று.)

கம்பீரஸ்வபாவ முடையவனும் மேகத்துக்குத் தலைவனுமான வருணனே! நாங்கள் சொல்லுவதொன்றை நீ மறுக்காதொழியவேண்டும்; அது என்னவெனில்; சமுத்திரத்தில் பிரவேசித்து, நீரைமொண்டு கொண்டு, முழக்கமிட்டு, மேலேயெழுந்து, ஊழி முதல்வனுடைய திருமேனியைப்போல சரீரம் கறுத்து, வலிமையும் அழகுமுள்ள திருத்தோள்களையுடைய பத்மநாபனுடைய திருக்கையி லிருக்கும் திருவாழியைப்போல பிரகாசித்து, ஸ்ரீ பாஞ்சஜந்யத்தைப் போலநின்று சப்தித்து, தாமதஞ்செய்யாமல் திருச் சார்ங்க மானது விட்ட பாணவருஷத்தைப்போல



யாவரும் வாழும்படிக்கு உலகத்தில் நாங்களும் சந்தோஷித்து மார்கழி நீராடுவதற்காகப் பெய்வாயாக, என்பது தாத்பர்யம்.

மாயனைமன்னு வடமதுரைமைந்தனைத்
தூயபெருநீர் யமுனைத்துறைவனை
ஆயர்குலத்தினிற் றோன்றுமணிவிளக்கைத்
தாயைக்குடல்விளக்கஞ் செய்ததாமோதரனைத்
தூயோமாய்வந்துநாம் தூமலர்தூவித்தொழுது
வாயினாற்பாடி மனத்தினாற்சிந்திக்கப்
போயபிழையும் புகுதருவானின்றனவும்
தீயினிற்றூசாகுஞ் செப்பேலோரெம்பாவாய். (ரு)

(அ - கை.) பகவத் விஷயத்தில் சம்பந்தித்தவர்களுக்கு வரும் ப்ரயோஜனத்தைச் சொல்லுகிறார்கள்.

(இ - ள்.) மாயனை - ஆச்சர்யமான குணசேஷ்டிதங்களையுடையவனை, மன்னு - பகவத் ஸம்பந்தம் நிலைபெற்ற, வடமதுரை - வடமதுரையில் வந்தவதரித்த, மைந்தனை - வலிமையுடையவனை, தூய - பரிசுத்தமான, பெரு நீர் - விசேஷித்த நீரையுடைய, யமுனைத் துறைவனை - யமுனைக் கரையின்கண் எழுந்தருளி யிருக்குமவனை, ஆயர் குலத்தினில் - கோபாலர்கள் குலத்தில், தோன்றும் - அவதரித்தருளின, மணிவிளக்கை - இரத்னதீபம் போன்றவனை, தாயை - தாயான யசோதைப்பிராட்டியினுடைய, குடல் - வயிற்றை, விளக்கம்செய்த - பிரகாசிக்கப் பண்ணின, தாமோதரனை - கயிற்றால் கட்டப்பட்ட வயிற்றையுடையவனை, நாம் —, தூயோமாய் - பரிசுத்தர்களாய், வந்து —, தூமலர் - பரிசுத்தமான புஷ்

பங்களை, தூவி - சமர்ப்பித்து, தொழுது - வணங்கி, வாயினால்—, பாடி - திருநாம சங்கீர்த்தனஞ்செய்து, மனத்தினால்-மனசினாலே, சிந்திக்க-சிந்தனை பண்ண; போய - கடந்த, பிழையும் - தோஷங்களும், புகுதருவான் - இனி வரப்போகிறதாக, நின்றனவும் - இருப்பவைகளும், தீயினில் - தீயிலிட்ட, தூசு ஆகும்-தூசைப்போல அழிந்துபோகும், (ஆகையால்) செப்பு-அவன் திருநாமங்களை அநுசந்திப்பாயாக. (ஏ-று.)

ஆச்சர்யமான குணசேஷ்டிதங்களையுடையவனை பகவத் ஸம்பந்தம் மாறாத வடமதுரையில் வந்தவதரித்த வலிமையுடையவனை, பரிசுத்தமான பெருநீரையுடைய யமுனைத் துறையிலெழுந்தருளியிருக்கும்வனை கோபாலர்கள் குலத்தில் அவதரித்தருளின இரத்தின தீபம் போன்றவனை, தாயான யசோதைப்பிராட்டியினுடைய வயிற்றை ப்ரகாசிக்கப் பண்ணின் தாமோதரனை, நாம் பரிசுத்தர்களாக வந்து ப்ரிசுத்தமான புஷ்பங்களை ஸமர்ப்பித்து வணங்கி, வாயினால் அவனைப்பாடி மனத்தினாலே சிந்திக்க, பூர்வமிருந்த பாபங்களும் இனிவரப்போகுமவைகளும் தீயிலிட்டதூசைப்போலாய்விடும். ஆகையால் அவன் திருநாமங்களையநுசந்திப்பாயாக. என்பதுதாத்பர்யம்.

புள்ளுஞ்சிலும்பினகாண் புள்ளரையன்கோயிலில்
வெள்ளைவிளிசங்கின் பேரரவங்கேட்டிலையோ
பிள்ளாயெழுந்திராய் பேய்முலைநஞ்சுண்டு
கள்ளச்சகடங் கலக்கழியக்காலோச்சி
வெள்ளத்தரவிற் றுயிலமர்ந்தவித்தினை
உள்ளத்துக்கொண்டு முனிவர்களும்யோகிகளும்
மெள்ளவெழுந் தரியென்றபேரரவம்
உள்ளம்புகுந்து குளிர்ந்தேலோரெம்பாவாய்.



(அ-கை.) சிலர் சேர்ந்துபோய் வேறொருத்தியை யெழுப்பும்போது விடிந்ததற் கடையாளம் சொல்லுகிறார்கள்.

(இ-ள்.) புள்ளும் - பக்ஷிகளும், சிலும்பின காண் - கூவிக்கொண்டு செல்லா நின்றன; புள் அரையன் - பெரிய திருவடிக்கு நாயகனான ஸர்வேச்வரனுடைய, கோயிலில்-திருக்கோயிலில், வெள்ளை-வெள்ளைநிறமுடையதாய், விளி-கோஷத்தை யுண்டாக்கின, சங்கின் - சங்கத்தின், பேர் அரவம் - பெருத்த ஓசையை, கேட்டிலையோ - நீ கேட்கவில்லையோ? பிள்ளாய் - ஓ சிறுபெண்ணே! எழுந்திராய் - எழுந்திருப்பாயாக, பேய் - பூதனையினுடைய, முலை - முலையினிடத்திருந்த, நஞ்சு - விஷத்தை, உண்டு - குடித்து, கள்ளம் — வஞ்சனையுடைய, சகடம் - சகடமானது, கலக்கு அழிய - கட்டுக்குலையும்படி, கால் ஓச்சி-திருவடியை யெடுத்துவீசி, வெள்ளத்து - திருப்பாற்கடலில், அரவில் - ஆதிசேஷன்மீது, துயில் அமர்ந்த-யோகநித்திரைவிரும்பிய, வித்தினை - ஜகத்காரணபூதனானவனை, உள்ளத்துக்கொண்டு - மனத்தில் வைத்து, முனிவர்களும் - மஹாசீலர்களும், யோகிகளும்-யோகத்திலிருப்பவர்களும், மெள்ள எழுந்து — மெதுவாக எழுந்திருந்து, அரி என்ற - அரி என்றழைத்த, பேர் அரவம் — பெரிய ஓசையானது, உள்ளம் புகுந்து - உள்ளே பிரவேசித்து, குளிர்ந்து - குளிரச்செய்தது. (எ - று.)

பக்ஷிகளும் கூவிக்கொண்டு செல்லா நின்றன; பெரிய திருவடிக்குத் தலைவனான ஸர்வேச்வரனுடைய திருக்கோயிலில் - வெள்ளை நிறமுடையதாய்,

கோஷத்தை யுடைத்தான சங்கத்தின் பெரிய ஓசையை நீ கேட்கவில்லையோ? ஓ சிறுபெண்ணே! எழுந்திருப்பாயாக. பேயான பூதனையினுடைய முலையினிடத்திருந்த விஷத்தையுண்டு வஞ்சனையோடு வந்த சகடத்தைக் கட்டுக்குலையும்படி திருவடியை நிமிர்த்து, திருப்பாற்கடலில் திருவனந்தாழ்வான்மீது யோகநித்திரைவிரும்பிய ஜகத்காரண பூதனானவனை, உள்ளத்திற்கொண்டு, முனிவர்களும் யோகிகளும் மெள்ள எழுந்திருந்து, அரியென்றழைத்த பெரிய ஓசையானது உள்ளத்திற்புகுந்து குளிரச்செய்தது - என்பது தாத்பர்யம்.

கீசுகீசென்றெங்கு மானைச்சாத்தன்கலந்து
  பேசினபேச்சரவங் கேட்டிலையோபேய்ப்பெண்ணே
காசும்பிறப்புங் கலகலப்பக்கைபேர்த்து
  வாசநறுங்குழ லாய்ச்சியர்மத்தினால்
ஓசைபடுத்தத் தயிரரவங்கேட்டிலையோ
  நாயகப்பெண்பிள்ளாய் நாராயணன்மூர்த்தி
கேசவனைப்பாடவும் நீ கேட்டேகிடத்தியோ
  தேசமுடையாய் திறவேலோரெம்பாவாய். (எ)

(அ - கை.) பகவத்விஷயத்தின் சுவடறிந்தே மறந்துகிடக்கின்றாளொருத்தியையெழுப்புகிறார்கள்.

(இ - ள்.) கீசுகீசு என்று - கீசுகீசு என்று கூவிக்கொண்டு, எங்கும் - எவ்விடத்திலும், ஆனைச்சாத்தன் - பாரத்வாஜபக்ஷி, கலந்து - கூடி, பேசின - பேச்சு - பேசின பேச்சுக்களின், அரவம் - சப்தத்தை, கேட்டிலையோ - கேட்கவில்லையோ! பேய்ப்பெண்ணே - அறிவில்லாதவளே! காசும் - அச்சுத்தாலியும், பிறப்பும் - முளைத்தாலியும், கலகலப்ப - கலகலவென்று



ஒலிக்க, கைபேர்த்து - கையையெடுத்து, வாசம் நறும் - மிக்க வாசனையையுடைய, குழல் - மயிர்முடியையுடைய, ஆய்ச்சியர் - இடைப்பெண்கள், மத்தினால் - மத்தைக்கொண்டு - ஓசைபடுத்த - ஓசையையுண்டாக்க, தயிர் - தயிரினுடைய, அரவம் - சப்தத்தை, கேட்டிலையோ - கேட்கவில்லையோ? நாயகப் பெண்பிள்ளாய் - பெண்களுக்கெல்லாம் தலைமையானவளே! நாராயணன் - ஸ்ரீமந்நாராயணனுடைய, மூர்த்தி - அவதாரமாய், கேசவனை - கேசியென்னும் அசுரனைக்கொன்ற கிருஷ்ணனை, பாடவும் - நாங்கள் பாடிக்கொண்டிருக்கவும், நீ——, கேட்டே - கேட்டுக்கொண்டே, கிடத்தியோ - கிடக்கின்றாயோ? தேசம் உடையாய் - தேஜஸ்ஸையுடையவளே, திற - கதவுதிறப்பாயாக. (எ - று.)

கீசுகீசு என்று கூவிக்கொண்டு எவ்விடத்திலும் ஆனைச்சாத்தன் கூடிப்பேசின பேச்சுக்களின் ஓசையைக்கேட்கவில்லையோ? அறிவில்லாதவளே! அச்சுத்தாலியும் முளைத்தாலியும் கலகல வென்றொலிக்கக் கையெடுத்து மிக்க வாசனையோடுகூடின மயிர்முடியையுடைய இடைப்பெண்கள் மத்தைக்கொண்டு ஓசையுண்டாக்க (உண்டான) தயிரினுடைய சப்தத்தைக்கேட்கவில்லையோ? பெண்களுக்கெல்லாம் நாயகமானவளே! ஸ்ரீமந்நாராயணனுடைய திருவவதாரமாய் கேசி என்னும் அசுரனைக்கொன்ற ஸ்ரீகிருஷ்ணனை நாங்கள் பாடிக்கொண்டிருக்கவும் நீ கேட்டுக்கொண்டே படுக்கையில் கிடக்கிறாயோ? தேஜஸ்ஸையுடையவளே! கதவைத்திறப்பாயாக என்பது தாத்பர்யம்.

கீழ்வானம்வெள்ளென் றெருமைசிறுவீடு
மேய்வான்பரந்தனகாண் மிக்குள்ள பிள்ளைகளும்
போவான்போகின்றாரைப் போகாமற்காத்துன்னைக்
கூவுவான்வந்துநின்றோங் கோதுகலமுடைய
பாவாயெழுந்திராய் பாடிப்பறைகொண்டு
மாவாய்பிளந்தானை மல்லரைமாட்டிய
தேவாதிதேவனைச் சென்றுநாம்சேவித்தால்
ஆவாவென்றாராய்ந் தருளேலோரெம்பாவாய்.

(அ - கை.) வேறொருத்தியை யெழுப்புகிறார்கள்.

(இ - ள்.) கீழ்வானம் - கிழக்குத்திக்குவானம், வெள் என்று - வெளுத்து, எருமை-எருமைகள், சிறுவீடு - பனிப்புல்லை, மேய்வான் - மேய்வதற்காக, பரந்தனகாண் - எங்கும் பரவின; மிக்குள்ள - இதரமான, பிள்ளைகளும் - பிள்ளைகளெல்லோரும், போவான் - போவதற்காக, போகின்றாரை போகுமவர்களை, போகாமல் காத்து - போகாமல் தடுத்து, உன்னை——, கூவுவான் - அழைப்பதற்காக, வந்துநின்றோம் - வந்துநின்றுகொண்டிருக்கிறோம், கோதுகலமுடைய - சந்தோஷமுடைய, பாவாய் - பதுமைபோன்றவளே! எழுந்திராய் - எழுந்திருப்பாயாக. பாடி - அவனைத்துதித்து, பறைகொண்டு - புருஷார்த்தம்பெற்று, மா-குதிரைவடிவங்கொண்டுவந்த கேசி என்னும் அசுரனுடைய, வாய் - வாயை, பிளந்தானை - இரண்டாகக் கிழித்தவனை, மல்லரை - மல்லர்களை, மாட்டிய - அழியச்செய்த, தேவாதிதேவனை - தேவர்களுக்கெல்லாம் ஆதிதேவனானவனை, சென்று - போய், நாம்——, சேவித்தால் - சேவிப்போமானால், ஆவா



என்று - ஐயோவென்று, ஆராய்ந்து - நமது காரியத்தை விசாரித்து, அருள்-கிருபை செய்வன். (எ-று.)

கிழக்குத்திக்கு, வானம்வெளுத்து, எருமைகள் பனிப்புல்லை மேய்வதற்காக எங்கும்பரவின; இதரமான பிள்ளைகளெல்லாரும் போவதற்காகப் போகுமவர்களைப் போகாமல் தடுத்து, உன்னை யழைப்பதற்காக வந்துநின்றோம்; சந்தோஷமுடைய பெண்ணே! எழுந்திருப்பாயாக. அவனைத் துதித்துப் புருஷார்த்தம்பெற்று, குதிரைவடிவங் கொண்டுவந்த கேசி யென்னும் அசுரனுடைய வாயை இரண்டாகக் கிழித்தவனை, மல்லர்களை யழியச்செய்த தேவாதிதேவனை நாம்சென்றுசேவிப்போமானால் அவன்நம் விஷயத்தில் ஐயோபாவமென்றிரங்கி நமது காரியத்தை விசாரித்து க்ருபைசெய்வன். என்பது தாத்பர்யம்.

தூமணிமாடத்துச் சுற்றும்விளக்கெரியத்
தூபங்கமழத் துயிலணைமேற்கண்வளரும்
மாமான்மகளே மணிக்கதவந்தாள் திறவாய்
மாமீரவளை எழுப்பீரோவுன்மகள்தான்
ஊமையோவன்றிச் செவிடோவனந்தலோ
ஏமப்பெருந்துயில் மந்திரப்பட்டாளோ
மாமாயன்மாதவன் வைகுந்தனென்றென்று
நாமம்பலவும் நவின்றேலோரெம்பாவாய். (கூ)

(அ - கை.) இதுவுமது.

(இ - ள்.) தூ - பரிசுத்தமான, மணி - மாணிக்கங்களிழைத்த, மாடத்து - க்ருஹத்தில், சுற்றும்-சுற்றிலும், விளக்கு எரிய - தீபம் எரிந்துகொண்டிருக்க, தூபம்-சாம்பிராணிதூபம், கமழ-பரிமளிக்க, துயில்-

நித்ரிக்கத்தக்க, அணைமேல்-சயநத்தின்மேல், கண்வளரும் - உறங்குகிற, மாமான்மகளே - அம்மான்மகளே! மணிக்கதவம்-ரத்நகசிதமானகதவின், தாள்திறவாய்-தாள்திறக்கக்கடவாய், மாமீர்-மாமிமாரே! அவளெழுப்பீரோ - அவளையெழுப்பமாட்டீரோ? உன்மகள்தான் - உன்பெண்பிள்ளைதான், ஊமையோ - மூங்கையோ? அன்றி - அல்லது, செவிடோ-செவிடியோ? அனந்தலோ-க்ருஷ்ணஸம்ச்லேஷஆயாஸத்தால் இப்பொழுதுதான் உறங்குகின்றாளோ? ஏமப்பட்டாளோ-எழுந்திராதபடி காவலிடப்பட்டாளோ? பெருந்துயில்-பெருந்தூக்கம் கொள்ளும்படி, மந்திரப்பட்டாளோ-மந்திரிக்கப்பட்டாளோ? மாமாயன் - பெரிய ஆச்சர்யகுணசேஷ்டிதங்களையுடைவன், மாதவன் - ஸ்ரீயப்பதி, வைகுந்தன்-ஸ்ரீவைகுண்டன், என்றென்று-என்றுசொல்லி, நாமம் பலவும் - அவனது திருநாமங்கள் பலவற்றையும், நவின்று - சொன்னோம். (எ - று.)

பரிசுத்தமான மணிகளிழைத்த மாளிகையில், சுற்றிலும் தீபங்களெரிய, சாம்பிராணிப்புகைபரிமளிக்க, நித்ரிக்கத்தக்க சயநத்தின்மேல் நித்ரைசெய்துகொண்டிருக்கிற அம்மான்மகளே! ரத்நமயமான கதவுத்தாளைத் திறக்கக்கடவாயென்று ஒருகோபபாலிகையைக் கோதைநாயகியாரெழுப்ப, அவள் ஒன்றும் மறுமொழிசொல்லாதிருந்ததனால், அந்தப்பெண்ணின் தாயை மாமியென்றழைத்து, உன்பெண்பேசாதிருப்பதற்கு ஊமையோ? செவிடியோ? அல்லது, இப்போதுதான் உறங்கத்தொடங்கினாளோ? அல்லது காவலில்வைக்கப்பட்டாளோ? பெருந்தூக்கம் தூங்கும்படி மந்த்ரிக்கப்பட்டாளோ? என்றுவினவ, அதற்கு, அவள், இந்த பெண்ணெழுந்திருக்கும்படி திருநாமங்களைச்சொல்லுங்கள் என்றுசொல்ல, ஆச்சர்யகுணசேஷ்டிதங்களையுடையவன் ஸ்ரீயப்பதி, வைகுந்தன் என்று அவனது திருநாமங்கள் பலவற்றையுஞ்சொல்லினோம் ஆதலால், அவளையெழுப்புவாயாகவென்று நியமித்தாளென்று தாத்பர்யம்.



நோற்றுச்சுவர்க்கம் புகுகின்றவம்மனாய்
மாற்றமுந்தாராரோ வாசல்திறவாதார்
நாற்றத்துழாய்முடி நாராயணன்நம்மால்
போற்றப்பறைதரும் புண்ணியனால்பண்டொருநாள்
கூற்றத்தின்வாய் வீழ்ந்தகும்பகருணனும்
தோற்றுமுனக்கே பெருந்துயில்தான்தந்தானோ
ஆற்றவனந்தலுடையாயருங்கலமே
தேற்றமாய்வந்து திறவேலோரெம்பாவாய். (௰)

(அ - கை.) இதுவுமது.

(இ - ள்.) நோற்று - நோன்புநோற்று, சுவர்க்கம் - சுகத்தை, புகுகின்ற - அநுபவிக்கின்ற, அம்மனாய் - ஸ்வாமினியானவளே! வாசல்திறவாதார் - வாசற் கதவைத் திறவாதவர்கள், மாற்றமுந்தாராரோ - ஒருபேச்சாகிலும் பேசார்களோ? நாற்றம் - பரிமளமுள்ள, துழாய் - திருத்துழாய் மாலையணிந்த, முடி-திருவபிஷேகத்தையுடையவனும், நாராயணன்-எங்கும்வியாபித்து எல்லார்க்கும் ரக்ஷகனும், நம்மால்போற்ற - நம்மாலேமங்களாசாஸநம் பண்ணப்படும்படி, பறைதரும் - கைங்கர்யத்தைத்தருகிற, புண்ணியன் - தார்மிகனும், ஆல் - ஆகையாலே, பண்டு ஒருநாள் - பூர்வம் ஒருகாலத்தில், கூற்றத்தின் வாய்வீழ்ந்த - யமன்வாயில் விழுந்த, கும்பகருணனும் - கும்பகர்ணனும், உனக்கே - உனக்கே, தோற்று - தோற்றுப்போய், பெருந்துயில் - பேருறக்கத்தை, தான்

தந்தானோ-தானே தந்துபோனானோ, ஆற்ற-மிகுதியாக, அனந்தல் உடையாய்-நித்திரையுடையவளே! அருங்கலமே-எங்களுக்கு ஸ்ரேஷ்டபூஷணமாயிருப்பவளே! தேற்றமாய்வந்து - தெளிவோடேவந்து, திற-கதவைத் திறப்பாயாக. (எ - று.)

நோன்பு நோற்றுச் சுகத்தை அநுபவித்துக்கொண்டிருக்கிற இறைவியே! கதவைத்திறவாதவர்கள் ஒரு மறுமொழியாயினும் சொல்லலாகாதோ? பரிமளித்துக்கொண்டிருக்கிற திருத்துழாய் மாலையைத் திருமுடியிலணிந்த ஸர்வேச்வரன் நம்மால் மங்களாசாஸநம் செய்யப்படும்போது, நமக்கு புருஷார்த்தத்தைக் க்ருபைசெய்கிற தர்மாத்மாவாகிய அவனாலே பூர்வம் ஒரு காலத்தில் யமனுடைய வாயில்வீழ்ந்த கும்பகர்ணன் உனக்கு நெடுந்தூக்கத்தைத் தந்தானோ? பேருறக்கக்காரீ! எங்களுக்கு அருமையான ஆபரணம்போல்பவளே! நீ தெளிவோடுவந்து, கதவைத் திறக்கக்கடவாயென்று ஒருகோபிகையை கோதை நாயகியார் அழைக்கிறாரென்று தாத்பர்யம்.

கற்றுக்கறவைக் கணங்கள்பலகறந்து
செற்றார்திறலழியச் சென்றுசெருச்செய்யும்
குற்றமொன்றில்லாத கோவலர்தம்பொற்கொடியே
புற்றரவல்குல் புனமயிலேபோதராய்
சுற்றத்துத்தோழிமா ரெல்லாரும்வந்துநின்
முற்றம்புகுந்து முகில்வண்ணன்பேர்பாடச்
சிற்றாதேபேசாதே செல்வப்பெண்டாட்டிநீ
எற்றுக்குறங்கும் பொருளேலோரெம்பாவாய். (கக)

(அ - கை.) இதுவுமது.

(இ - ள்.) கன்று - கன்றுகளையுடைய, பலகறவைக்கணங்கள்-பலபசுக்கூட்டங்களை, கறந்து-பால்க



றந்து, செற்றார் - பகைவருடைய, திறல்அழிய - வலிகெடும்படி, சென்று - எதிர்த்துப்போய், செருசெய்யும் - யுத்தம்செய்கின்ற, குற்றம்-தோஷம், ஒன்றுஇல்லாத-சிறிதுமில்லாத, கோவலர்தம்-கோபாலருடைய, பொற்கொடியே - பொற்கொடிபோல்பவளே! புற்று அரவு அல்குல்—புற்றிலுள்ள பாம்பின்படம்போன்ற நிதம்பப்ரதேசத்தையுடையவளே! புனமயிலே-காட்டில்யதேச்சையாய்த் திரிகிறமயில்போல்பவளே! போதராய்-புறப்பட்டுவருவாயாக, சுற்றத்துத்தோழிமார் எல்லாரும் - சுற்றத்தோடு தோழிமாரெல்லாரும், வந்து-வந்து, நின்முற்றம் புகுந்து-உன்வாசலில் பிரவேசித்து, முகில்வண்ணன் - மேகவண்ணனாகிய ஸ்ரீகண்ணபிரானது, பேர் - திருநாமங்களை, பாட - பாடிக்கொண்டிருக்க, சிற்றாதே பேசாதே - அசையாமலும், பேசாமலுமிருக்கிற, செல்வப்பெண்டாட்டிநீ - க்ருஷ்ணஸம்ஸ்லேஷ பாக்யத்தையுடையபெண்பிள்ளையாகியநீ, உறங்கும்பொருள் - இப்படி உறங்குவது, எற்றுக்கு - யாதுக்கு? (எ - று.)

கன்றையுடைய பல கறவைப்பசுக்களைக் கறந்து பால் கொள்வோரும், சத்ருசேனைகளை வென்றடக்க வல்லசக்தியுள்ளவரும் தோஷம் சிறிதுமில்லாதவருமாகிய கோபாலருடைய பொற்கொடி போன்ற பெண்ணே! புற்றரவின் படம்போன்ற நிதம்ப ப்ரதேசத்தையுடையவளே! காட்டில் வாழ்கின்ற மயிற்சாயலையுடையவளே! சுற்றத்தாராகிய தோழியரெல்லாரும் திரண்டுவந்து, உன் முற்றத்தில் ப்ரவேசித்து, மேகவண்ணனான ஸ்ரீகிருஷ்ணனுடைய அநந்தகல்யாணகுணங்களைப்பாடிக்கொண்டிருக்க, அசையாதும்பேசா

மனுமிருக்கிற ஐச்வர்ய ஸம்பூர்ணையானவளே! நீ இப்படி உறங்குவதற்குப் பயனென்னை, எழுந்துவாவென்று ஒரு கோபிகையைக் கோதைநாயகியார் அழைக்கிறாளென்று தாத்பர்யம்.

கனைத்திளங்கற்றெருமை கன்றுக்கிரங்கி
நினைத்துமுலைவழியே நின்றுபால்சோர
நனைத்தில்லஞ்சேறாக்கும் நற்செல்வன்தங்காய்
பனித்தலைவீழ நின்வாசற்கடைபற்றிச்
சினத்தினால்தென்னிலங்கைக் கோமானைச்செற்ற
மனத்துக்கினியானைப் பாடவும்நீவாய்திறவாய்
இனித்தானெழுந்திராயீதென்ன பேருறக்கம்
அனைத்தில்லத்தாரு மறிந்தேலோரெம்பாவாய். (கஉ)

(அ-கை.) இதுவுமது.

(இ-ள்.) இளங்கன்று எருமை - இளங்கன்றுகளையுடைய எருமைகள், கனைத்து - கதறி, கன்றுக்கிரங்கி - தம் கன்றுகளிடத்தில் இரக்கங்கொண்டு, நினைத்து - அவற்றை நினைத்து, முலைவழியே - முலைகளின்வழியாக, பாலுநின்றுசோர - பால் இடைவிடாமல்பெருக, இல்லம் நனைத்து-வீடுகளை யீரமாக்கி, சேறாக்கும்-துவைத்துச் சேறாக்குகிற, நல்செல்வன்-நல்ல ஸம்பத்தையுடையவனுடைய, தங்காய்-சோதரியானவளே! தலைபனிவீழ-எங்கள் தலையில் பனிவிழுகையால், நின்வாசல் கடைபற்றி - உன் வாசற்காலில் தண்டியத்தைப் பற்றிக்கொண்டு, சினத்தினால் - கோபத்தாலே, தென் இலங்கைக்கோமானை-தென்னிலங்கைக் கரசனாகிய இராவணனை, செற்ற - கொன்றவனை, மனத்துக்கு இனியானை-மனத்துக்கு போக்யபூதனான சக்ரவர்த்தித்திருமகனை, பாடவும் - பாடிக்கொண்டிருக்கவும், நீ வாய்திறவாய் - நீவாய்திறவாதிருக்கிறாய், இனித்தான் - இனியாயினும், எழுந்திராய்-எழுந்திருப்பாயாக, ஈதென்ன பேருறக்கம் - இது என்னபெருந்தூக்கம், அனைத்து இல்லத்தாரும்-ஊரிலுள்ள எல்லாவீட்டாரும், அறிந்து-துயிலுணர்ந்தார்கள். (எ-று.)



கனைத்துக் கொண்டிருக்கிற இளங்கன்றுகளையுடைய எருமைகள் கன்றுகளைக் குறித்திரங்குவதனால், பாலானது முலைவழியாகப்பெருக, அந்தப் பாலால், வீடுமுழுதும் நனைந்துத் துவைத்துச் சேறாக்குதலாகிய சிறந்தசெல்வத்தையுடையவனுக்குத் தங்கையே! எங்கள்தலைமேல் பனிவிழுதலால், உன்வாசற்காலின் தண்டியத்தைப் பற்றிக்கொண்டு நிற்கிறோம், திருவடியை நலிந்தானென்கிற கோபத்தால் தென்னிலங்கைக்கோமானாகிய இராவணனைக் கொன்றவனும் மனத்துக்கினிமையாயிருப்பவனுமாகிய இறைவனைப் பாடாநிற்கவும், வாய்திறவாதிருக்கிறாய்; இனியாயினும் எழுந்திரு; இதுவென்ன பெருந்தூக்கம்; ஊரிலுள்ள எல்லாவீட்டாரும் துயிலுணர்ந்தார்கள். என்று ஒரு கோபிகையைக் கோதைநாயகியார் அழைக்கிறாரென்று தாத்பர்யம்.

புள்ளின்வாய்கீண்டானைப் பொல்லாவரக்கனைக்
கிள்ளிக்களைந்தானைக் கீர்த்திமைபாடிப்போய்
பிள்ளைகளெல்லாரும் பாவைக்களம்புக்கார்
வெள்ளியெழுந்து வியாழமுறங்கிற்று
புள்ளுஞ்சிலம்பினகாண் போதரிக்கண்ணினாய்
குள்ளக்குளிரக் குடைந்துநீராடாதே
பள்ளிக்கிடத்தியோ பாவாய்நீநன்னாளால்
கள்ளந்தவிர்ந்து கலந்தேலோரெம்பாவாய். (கங)

(அ-கை.) இதுவுமது.

(இ - ள்.) புள்ளின் - கொக்குஎன்னும் பக்ஷிரூபமாய் வந்த பகாசுரனுடைய, வாய் - வாயை, கீண்டானை - கிழித்தவனை, பொல்லா அரக்கனை - துஷ்டனாகிய ராவணாசுரனை, கிள்ளிகளைந்தானை - நிர்மூலமாய்க் களைந்தவனை, கீர்த்திமைபாடிப்போய் - (அவனது வீரசரித்திரத்தைக்) கீர்த்தித்துக்கொண்டேபோய், பிள்ளைகள் எல்லாரும் - நோன்புக்குவரத்தகுந்த பாலிகைகள் யாவரும், பாவைக்களம்புக்கார் - ஸங்கேதஸ்தலத்தை யடைந்தார்கள்; வெள்ளி - சுக்ரன், எழுந்து - உதயமாகி, வியாழம் உறங்கிற்று - ப்ருஹஸ்பதி அஸ்தமித்தது, புள்ளும்சிலம்பின - பக்ஷிகளும் சப்தித்தன; போதுஅரிக்கண்ணினாய் - செந்தாமரை மலர்போலும் செவ்வரிபடர்ந்த கண்ணிணையுடையவளே! குள்ளக்குளிர - மிகவும் குளிர்ச்சியுண்டாகும்படி, குடைந்து - அவகாஹித்து, நீராடாதே - தீர்த்தமாடாமல், பள்ளி - படுக்கையில், கிடத்தியோ - கிடக்கின்றனையோ? பாவாய் - சிறுமீ! நீ - நீ, நன்னாள் - நல்லநாளில், கள்ளம் தவிர்ந்து - திருட்டுத்தனத்தைவிட்டு, கலந்து - எம்மோடு கலந்துகொள்ளவேண்டும். ஆல் - அசை.

புஷ்பங்களிலிருக்கிற வண்டுகள்போன்ற நேத்ரஸௌந்தர்யத்தையுடையவளே! பகாசுரனது வாயைப் பிளந்தவனும், நீசனான ராவணனைக் கொன்றவனும் ஆகிய ஸ்ரீமந்நாராயணனுடைய வீரசரித்திரத்தை நோன்புக்குவரத்தகுந்த சிறுமியரெல்லாரும் கீர்த்தித்துக்கொண்டேபோய் ஸங்கேதஸ்தலத்தில் சேர்ந்தார்கள்; சுக்ரன் உதயமானான்; வியாழம் அஸ்தமித்தது; பக்ஷிகள் ஒலிக்கின்றன, ஆகையால், ஓ சிறுமீ! நீ, நல்லநாளில், கபடத்தைவிட்டு, எங்களோடு கூடிக்கொ



ண்டு, க்ருஷ்ணனுடைய அநுபவவிச்லேஷத்தினால், உண்டானதாபம் தணியும்பொருட்டு, மிகவுங்குளிரும்படி, அவகாஹித்து நீராடாமல், சயநத்தின் மீதேபடுத்துறங்குகிறாய், இதென்னவென்று, கோதைநாயகியார் ஒருகோபிகையை அழைக்கிறாரென்பது தாத்பர்யம்.

உங்கள்புழைக்கடைத் தோட்டத்துவாவியுள்
செங்கழுநீர்வாய்நெகிழ்ந் தாம்பல்வாய்கூம்பின காண்
செங்கற்பொடிக்கூறை வெண்பல்தவத்தவர்
தங்கள்திருக்கோயில் சங்கிடுவான்போகின்றார்
எங்களைமுன்னமெழுப்புவான்வாய்பேசும்
நங்காயெழுந்திராய் நாணாதாய்நாவுடையாய்
சங்கொடுசக்கர மேந்துந் தடக்கையன்
பங்கயக்கண்ணானைப் பாடேலோரெம்பாவாய். (கச)

(அ - கை.) இதுவுமது.

(இ - ள்.) உங்கள் - உங்களுடைய, புழைக்கடைதோட்டத்து - புழைக்கடைத்தோட்டத்திலுள்ள, வாவியுள் - கிணற்றிலுள்ளே, செங்கழுநீர் - செவ்வல்லிமலர்கள், வாய்நெகிழ்ந்து - வாய்விண்டு, ஆம்பல் - நீலோத்பலங்கள், வாய்கூம்பின - வாய்குவிந்தன, காண் - வந்துகாண்பாயாக, செங்கல்பொடி - காவிக்கற்பொடி தோய்த்த, கூறை - வஸ்திரத்தை யணிந்தவரும, வெண்பல் - வெள்ளிய பற்களையுடைய, தவத்தவர் - தபோவேஷம்பூண்ட சிவத்விஜரும், தங்கள் - தங்களுடைய, திருக்கோயில் - ஆலயத்தில், சங்கிடுவான் - குச்சிக்கோல் என்கிற சாவியைக்கொண்டு கதவைத்திறக்கும்பொருட்டு, போகின்றார் - போகின்றார்கள், எங்களை - எங்களை, முன்னம் - முன்

னே, எழுப்புவான்-எழுப்பும்பொருட்டு, வாய்பேசும்-வாக்குத்தத்தம்செய்த, நங்காய்-குணபூர்த்தி யுள்ளவளே! நாணாதாய்-வெட்கமில்லாதவளே! நாவுடையாய்-வாக்வல்லபமுடையவளே! சங்கொடுசக்கரமேந்தும்-சங்கத்தோடு சக்கரத்தையுந்தாங்கின, தடக்கையன்-பெரிய திருக்கைகளையுடையவனும், பங்கயக்கண்ணானை-தாமரைக்கண்ணனாகிய ஸர்வேச்வரனை, பாட-ஸங்கீர்த்தநம் செய்யும்பொருட்டு, எழுந்திராய்-எழுந்து வருவாயாக. (எ-று.)

எங்களை முந்திவந்து எழுப்புவதாக வாக்குத்தத்தம்பண்ணின ஓ வெட்கமில்லாதவளே! உங்களுடையபுழைக்கடையிலுள்ள தோட்டத்துக்கிணற்றில், செங்கழுநீர்மலர்கள் பூத்தன; நீலோத்பலமலர்கள் குவிந்துபோயின. காவிவஸ்திரத்தையும் வெண்பல்லையுமுடைய சிவத்விஜரும் தத்தமாலயங்களில் கதவைத் திறக்கும்பொருட்டுப் போகிறார்கள், ஓ வாக்சாதுர்யமுள்ள பெண்ணே! சங்கசக்ரங்களைத் தரித்துக்கொண்ட, விசாலமான திருக்கைகளையுடையவனும், பத்மநேத்ரனுமாகிய ஸர்வேச்வரனுடைய திருநாமத்தை அநுஸந்திக்கும்பொருட்டு, எழுந்துவாவென்று, ஒருகோபகன்னிகையைக் கோதைநாயகியார் அழைக்கிறாரென்று தாத்பர்யம்.

எல்லேயிளங்கிளியே யின்னமுறங்குதியோ
சில்லென்றழையேன்மின் நங்கைமீர்போதருகின்றேன்
வல்லையுன்கட்டுரைகள் பண்டேயுன்வாயறிதும்
வல்லீர்கள்நீங்களே நானேதானாயிடுக
ஒல்லைநீபோதாயுனக்கென்ன வேறுடையை
எல்லாரும்போந்தாரோ போந்தார்போந்தெண்ணிக்கொள்



வல்லானைகொன்றானை மாற்றாரைமாற்றழிக்க
வல்லானைமாயனைப் பாடேலோரெம்பாவாய். (௧௫)

(அ-கை.) இதுவுமது.

(இ-ள்.) எல்லே-என்ன ஆச்சர்யம்! இளங்கிளியே-இளங்கிளிபோன்றவளே! இன்னம் உறங்குதியோ-இன்னம் உறங்குகின்றனையோ! சில்லென்று அழையேல்மின்-சில்லென்று கூப்பிடாதேயுங்கள், நங்கைமீர்-குணபூர்த்தியுள்ளவர்களே, போதருகின்றேன்-வருகிறேன், வல்லை-சமர்த்துள்ளவளே! பண்டே-பூர்வமே, உன்கட்டுரைகள்-உன் கட்டுவார்த்தைகளையும், உன்வாய்-உன்வாயையும், அறிதும்-யாம் அறிவோம், வல்லீர்கள்-சமர்த்துள்ளவர்கள், நீங்களே-நீங்கள்தான், நானேதான்-நானேதான், ஆயிடுக-ஆகட்டும், ஒல்லை-விரைவாக, நீபோதாய்-நீபுறப்படு, உனக்கு-உனக்கு, என்ன வேறுடையை-வேறுஎன்ன ப்ரயோஜநத்தையுடையவளாயிருக்கிறாய்; எல்லாரும் போந்தாரோ-யாவரும் வந்தார்களோ? போந்தார்-வந்தார்கள், போந்து-வந்து, எண்ணிக்கொள்-எண்ணிக்கொள்ளக்கடவாய், வல் ஆனைகொன்றானை-வலியகுவலயாபீடம் என்னும் யானையைக் கொன்றவனை, மாற்றாரை-பகைவரை, மாற்றழிக்கவல்லானை-பெருமை யழிக்கவல்லவனை, மாயனை-ஆச்சர்யகுண சேஷ்டிதங்களையுடையவனை, பாட-பாடும்பொருட்டு, (எ-று.)

இளங்கிளிபோலுஞ் சொல்லாளே! என்ன ஆச்சர்யம்? இன்னம் உறங்குகிறாயோவென்று ஒருகோபிகன்னிகையைக் கோதைநாயகிகேட்க, அதற்கு அந்தக்கன்னிகை, ஓ, நங்காய்! என்றழைத்து, நீங்கள் சில்லென்று அழைக்கவேண்டாம், நான்வருகிறேன் என்றதைத்

கேட்டு, சமர்த்துள்ளவனே! உன்னுடைய கட்டுவார்த்தைகளையும் உன்வாயையும் பூர்வமே நாங்கள் அறிவோமென்ன, அந்தக்கோபிகை, சமர்த்தர்கள் நீங்களேயாவீர்களென்று சொல்லி, மறுபடியும் நானேயாகட்டுமென்று சம்மதித்து, வரவேண்டியவர்களெல்லாரும் வந்தார்களோவென்ன, வந்திருக்கிறார்கள், வேண்டுமானால் நீவந்து எண்ணிக்கொள், எங்களைவிட்டு உனக்குவேறேயென்ன பயனிருக்கின்றதுஎன்ன, நான்வந்து செய்யுங்கார்யம் என்னென்ன, பலமுள்ளகுவலயாபீடமென்னும் யானையைக்கொன்றவனும், பகைவருடையபெருமையை அழித்தவனும் ஆச்சர்யகுண சேஷ்டிதங்களையுடையவனும் ஆகிய ஸர்வேச்வரனைப் பாடும்பொருட்டு நீ விரைவாகப் புறப்பட்டுவாவென்று அழைக்கிறாரென்று தாத்பர்யம்.

நாயகனாய்நின்ற நந்தகோபனுடைய
கோயில்காப்பானே! கொடித்தோன்றுந்தோரண
வாசல்காப்பானே! மணிக்கதவந்தாள்திறவாய்
ஆயர்சிறுமியரோமுக்கறைபறை
மாயன்மணிவண்ணன் நென்னலேவாய்நேர்ந்தான்
தூயோமாய்வந்தோம் துயிலெழல்பாடுவான்
வாயால்முன்னம்முன்னம் மாற்றாதேயம்மாநீ
நேசநிலைக்கதவம் நீக்கேலோரெம்பாவாய். (கசு)

(அ - கை.) வாசல்காப்பானை வேண்டுதல்.

(இ - ள்.) நாயகனாய்நின்ற - எங்களுக்குத்தலைவனாயிருக்கிற, நந்தகோபனுடைய - ஸ்ரீநந்தகோபருடைய, கோயில் காப்பானே - திருமாளிகையைக் காக்குமவனே, கொடிதோன்றும் - த்வஜக்கொடிகள் விளங்காநிற்பதாய், தோரணம் - தோரணங்கள் கட்டி



யிருப்பதான, வாசல்காப்பானே - திருவாசலைக்காக்குமவனே, மணிக்கதவந்தாள் - அழகியகதவின்தாழ்ப்பாளை, திறவாய் - திறப்பாயாக, ஆயர் - இடையருடைய, சிறுமியரோமுக்கு - சிறுமியராகிய எங்களுக்கு, அறைபறை - சப்திக்கிறபறையைத் தருவோமென்று, மாயன் - ஆச்சர்யகுணசேஷ்டிதங்களையுடையனாய், மணிவண்ணன் - நீலமணிபோலும் திருநிறத்தையுடையனான ஸர்வேச்வரன், நென்னலே - நேற்றே, வாய்நேர்ந்தான் - வாக்தத்தஞ்செய்தான், துயிலெழல் - திருப்பள்ளிஎழுச்சியை, பாடுவான் - பாடும்பொருட்டு, தூயோமாய் - பரிசுத்தராய், வந்தோம் - வந்திருக்கிறோம், வாயால் - வாயினால், [illegible]ன்னம்முன்னம் - முந்தமுன்ன [illegible] அம்மா - ஸ்வாமி! நீ - நீயே, நேசநிலைக்கதவம் - சேர்த்துப்பொருந்தியிருக்கிற கதவை, நீக்கு - திறப்பாயாக (எ - று.)

ப்ரபுவாயிருக்கிற ஸ்ரீநந்தகோபருடைய திருமாளிகையைக் காவல்காக்கிற கோபாலனே! கதவைத் திறவாயென்றும், கொடிகளாலும் மகரதோரணங்களாலும் ப்ரகாசித்துக்கொண்டிருக்கிற கோபுரத்துவாரத்தைக் காவல்காக்கிற த்வாரபாலகனே! மணிமயமாய் விளங்குகிற கதவின் தாழ்ப்பாளைத்திறப்பாயாகவென, அவன் கதவைத் திறக்கவேண்டியது யாருக்கென, கோபபாலிகைகளான எங்களுக்கு, சப்திக்கிறவாத்ய விசேஷத்தைத் தருவதாக, ஆச்சர்ய குணசேஷ்டைகளுள்ள நீலமணிவண்ணனான சர்வேச்வரன் நேற்றையதினமே வாக்குத்தத்தம்செய்தான், நாங்கள் அநந்யப்ரயோஜநமென்கிற பரிசுத்தராய், நித்திரையிலிருக்

றை கண்ணபிரான் எழுந்திருக்கும்படி திருப்பள்ளி யெழுச்சி பாடும்பொருட்டு வந்தோம் ஆகையால், வாயிலுல் முந்தறமுன்னம் தடைசொல்லாமல் பொருத்தமாகச் சேர்த்திருக்கிற கதவை, ஸ்வாமீ! நீயேதிறக்கவேண்டும் என்று கோதைநாய்கியார் கோபபாலிகைகளோடு கூடி ஸ்ரீகண்ணபிரான் சந்நிதிக்குப்போய் ப்ரார்த்திக்கிறாரென்று தாத்பர்யம்.

அம்பரமேதண்ணீரே சோறேயறஞ்செய்யும்
எம்பெருமான்நந்த கோபாலாவெழுந்திராய்
கொம்பனார்க்கெல்லாங் கொழுந்தேகுலவிளக்கே
எம்பெருமாட்டி யசோதாயறிவுறாய்
அம்பரமூட[illegible]ரோங்கியுலகளந்த
[illegible] றுங்கா[illegible] ந்திராய்
செம்பொற்கழலடிச் செல்வாபலதேவா
உம்பியும்நீயு முறங்கேலோரெம்பாவாய். (கஎ)

(அ - கை.) நந்தகோபர்முதலானவரை யெழுப்புதல்.

(இ - ள்.) அம்பரம் - வஸ்திரத்தையும், தண்ணீர் - குளிர்ந்த தீர்த்தத்தையும், சோறு - அன்னத்தையும், அறம்செய்யும் - தர்மபுத்தியால் க்ருபைசெய்கிற, எம்பெருமான் - எமக்கு ஸ்வாமியான, நந்தகோபாலா - ஸ்ரீநந்தகோபாலனே! எழுந்திராய் - எழுந்திருப்பாயாக, கொம்பனார்க்கெல்லாம் - பெண்களெல்லாருக்கும், கொழுந்தே - ஸ்ரேஸ்தாநமாகப்பிறந்தவளே! குலவிளக்கே - கோபகுலத்துக்கு மங்களதீபம் போன்றவளே! எம்பெருமாட்டி - எமக்கு ஸ்வாமிநியான, யசோதாய் - யசோதைப்பிராட்டியே! அறிவுறாய் - துயிலுணர்வாயாக, அம்பரம் ஊடறுத்து - ஆகாசத்தை



இடையறுத்துக்கொண்டு, ஓங்கி - மிகவும் வளர்ந்து, உலகு அளந்த - லோகங்களை அளந்தருளின, உம்பர் கோமானே - நித்யஸூரிகளுக்கு நிர்வாஹகனே! உறங்காது - நித்திரையைவிட்டு, எழுந்திராய் - எழுந்திருப்பாயாக, செம்பொன் - செம்பொன்னாற்செய்யப்பட்ட, கழல் - சதங்கைகளை, அடி - பாதத்திலணிந்த, செல்வா பலதேவா - ஐச்வர்யசம்ருத்தியை யுடையவனாகிய பலராமா! உம்பியும் நீயும் - உன் தம்பியான க்ருஷ்ணனும் நீயும், உறங்கேல் - எழுந்திருக்க வேண்டும். (எ - று.)

வஸ்த்ரங்கள் கொடுப்பதிலும், குளிர்ந்த தீர்த்தம் கொடுப்பதிலும், அன்னதானம் செய்வதிலும், மிகுந்த ஔதார்யத்தோடேகூடி எங்களுக்கு ஸ்வாமியான நந்தகோபாலனே! நித்ரையைவிட்டு எழுந்திருப்பாயாக வென்றும், பெண்களெல்லாருக்கும் சிரஸ்த்தாநமாயும், எங்கள் குலத்துக்கு மங்களதீபமாயும், எங்களுக்கு ஸ்வாமிநியாயுமிருக்கிற யசோதைப்பிராட்டியே! நீ துயிலுணரக் கடவாயென்றும், ஆகாசத்தை பேதித்துக்கொண்டு மிகவும் வளர்ந்து எல்லா வுலகங்களையும் திருவடியால் அளந்தருளின நித்யஸூரி நிர்வாஹகனே! நித்திரையைவிட்டு எழுந்திருப்பாயாகவென்றும், செம்பொற்சதங்கைகளை யணிந்த ஸ்ரீபாதங்களையுடைய ப்ரபுவாகிய பலராமனே! உன் தம்பியும் நீயும் எழுந்து எங்களுடைய முறையிட்டைக்கேட்கவேண்டுமென்றும், கோதைநாய்ச்சியார், [illegible] ளோடுகூடி, [illegible] எழுப்புகிறாரென்று தாத்பர்யம்.

உந்துமதகளிற்ற னோடாததோள்வலியன்
நந்தகோபாலன் மருமகளேநப்பின்னாய்
கந்தங்கமழுங் குழலீகடைதிறவாய்
வந்தெங்குங்கோழி யழைத்தனகாண்மாதவிப்
பந்தல்மேல்பல்கால் குயிலினங்கள்கூவினகாண்
பந்தார்விரலியுன் மைத்துனன்பேர்பாடச்
செந்தாமரைக்கையால் சீரார்வளையொலிப்ப
வந்துதிறவாய் மகிழ்ந்தேலோரெம்பாவாய். (௧௮)

(அ - கை,) நப்பின்னைப் பிராட்டியை எழுப்புதல்.

(இ - ள்.) உந்து - பெருகுகின்ற. மதம் - மதஜலத்தையுடைய, களிற்றன் - யானைபோல் வலியுடையவரும், ஓடாத - பகைவருக்குப் பின்னிடாத, தோள்வலியன்-புஜபலமுள்ளவரும் ஆகிய, நந்தகோபாலன் - நந்தகோபாலருடைய, மருமகளே - மருகியே! நப்பின்னாய் - நப்பின்னைப்பிராட்டியே! கந்தம் கமழும் - பரிமளம் வீசுகின்ற, குழலீ - கூந்தலையுடையவளே! கடைதிறவாய் - தாழ்ப்பாளைத்திறப்பாயாக, எங்கும் - எவ்விடத்திலும், கோழிவந்து- கோழிகள்வந்து, அழைத்தன - கூவாநின்றன, மாதவிப்பந்தல்மேல் - மாதவிக் கொடிகளாலாகிய பந்தலின்மீது, பல்கால் - பலதரம், குயில்இனங்கள் - குயிற்கூட்டங்கள், கூவின - கூவாநின்றன, பந்துஆர் - பந்துபொருந்திய, விரலி - விரல்களையுடையவளே! உன்மைத்துனன் - உன் மைத்துனனாகிய கண்ணபிரானது, பேர் - திருநாமங்களை, பாட - அநுஸந்திக்கும் பொருட்டு, செந்தாமரைக்கையால்-செந்தாமரைமலர் போன்ற திருக்கையால், சீர்ஆர் - மேன்



மைபொருந்திய, வளை - கங்கணங்கள், ஒலிப்ப - சப்திக்க, மகிழ்ந்து - சந்தோஷித்து, வந்து - வந்து, திறவாய் - கதவைத் திறக்கக்கடவாய். (எ - று.)

கோதைநாயகியார் முன்பாசுரத்தில் நந்தகோபாலருடைய திருமாளிகைக்குப்போய் அங்குள்ளவர்களை எழுப்புகிற க்ரமம் இப்படியல்லவென்று நினைத்து, ஸ்ரீகண்ணபிரானுக்கு அத்யந்த ப்ரியநாயகியும், நமக்குப் புருஷகாரியுமாகிய நப்பின்னைப்பிராட்டியை முன்னிலே பிடித்திக்கொண்டுபோய் எழுப்புவதே உசிதமென்று நினைத்து, மதயானையை நிகர்த்த பலமுள்ளவரும், மதயானைகளைத் தள்ளும்படியான பலமுள்ளவரும், மதயானைகளையுடையவரும் தமக்கெதிரில்லாத புஜபலமுள்ளவரும் ஆகிய நந்தகோபாலருடைய மருமகளே யென்றும், பரிமளம் வீசுகின்ற கூந்தலையுடைய நப்பின்னைப்பிராட்டியே என்றும், அழைத்து எழுப்பும்பொழுது, அவள், விடிந்ததற்கு த்ருஷ்டாந்தம் என்னென்ன, கோழிகள் எவ்விடத்திலும் வந்துகூவாநின்றனவென்றும், மாதவிக்கொடிப்பந்தலின் மீது குயிற்கூட்டங்கள் கூவாநின்றனவென்றும், சொல்லி, கதவின் தாழ்ப்பாளை வாங்கவேண்டுமென்று சொல்ல, அதற்கு அவள் தாழ்ப்பாளை வாங்கவேண்டியது யாதுக்கென்று கேட்க, பந்துபொருந்தியவிரல்களையுடையவளே! உன்மைத்துனனாகிய கண்ணபிரானுடைய திருநாமங்களைப் பாடும்பொருட்டு, ஐச்வர்யத்தால் மிகச் சிறந்து விளங்குகிற, செந்தாமரைமலர்போன்ற திருக்கையிலணிந்த கங்கணங்கள் த்வநிசெய்யும்படி சந்தோஷத்தோடு வந்து கதவைத் திறப்பாயாக. என்றுபிரார்த்திக்கிறாளென்று தாத்பர்யம்.

குத்துவிளக்கெரியக் கோட்டுக்காற்கட்டின்மேல்
  மெத்தென்றபஞ்ச சயநத்தின்மேலேறிக்
கொத்தலர்பூங்குழல் நப்பின்னைகொங்கைமேல்
  வைத்துக்கிடந்த மலர்மார்பாவாய்திறவாய்
மைத்தடங்கண்ணினாய் நீயுன்மணாளனை
  எத்தனைபோதுந் துயிலெழவொட்டாய்காண்
எத்தனையேலும் பிரிவாற்றகில்லாயால்
  தத்துவமன்று தகவேலோரெம்பாவாய். (௧௯)

(அ - கை.) க்ருஷ்ணனையும் நப்பின்னைப் பிராட்டியையும் ப்ரார்த்திப்பது.

(இ - ள்.) குத்துவிளக்கு எரிய - குத்துவிளக்குகள் எரியாநிற்க, கோட்டுக்கால் - தந்தக்கால்களையுடைய, கட்டில்மேல்-கட்டிலின்மீது, மெத்தென்ற-ம்ருதுவான, பஞ்சசயநத்தின்மேல் ஏறி - (அழகு, குளிர்ச்சி, மார்த்தவம், பரிமளம், வெண்மை) என்கிற ஐந்து குணங்களையுடைய படுக்கையின்மேலேறி, பூ கொத்து அலர் - புஷ்பக்கொத்துகள் மலர்தற்கிடமாகிய, குழல் - கூந்தலையுடைய, நப்பின்னை கொங்கை - நப்பின்னைப் பிராட்டியின் ஸ்தநங்களை, மேல் வைத்து - தனதுமார்பின் மேல் வைத்துக்கொண்டு, கிடந்த - சயநித்துக்கொண்டிருக்கிற, மலர் - விசாலமான, மார்பா-திருமார்பையுடைய கண்ணபிரானே! வாய்திறவாய்-திருவாய் மலர்ந்தொருவார்த்தை சொல்லக்கடவாய். மைத்தடம் கண்ணினாய்-அஞ்சனமெழுதின பெருங்கண்களையுடைய நப்பின்னைப் பிராட்டியே! நீ உன்மணாளனை-நீ உன் நாயகனை, எத்தனைபோதும் - ஒரு க்ஷணகாலமாயினும், துயிலெழ ஒட்டாய்-தூக்கம்விட்டெழுந்திருக்கச் சம்மதியாய், எத்தனையேலும்-எவ்வளவாயினும், பிரிவு- விச்லேஷத்தை, ஆற்றகில்லாய் - சஹிக்காதவளாவாயாயின், தத்துவம் அன்று-ஸ்வரூபமல்ல, தகவு அன்று-தர்மமும் அல்ல, (எ - று.) ஆல் - அசை.

குத்துவிளக்குகள் எரியாநிற்க, யானைத்தந்தத்தினாற்செய்யப்பட்ட கால்களமைத்த கட்டிலின்மேல், அழகு குளிர்ச்சி மென்மை வெண்மை நறுமணம் என்கிற ஐந்துகுணங்களோடுகூடின சயநத்தின்மேலேறி, பூங்கொத்துக்கள் விரிதற்கிடமான கூந்தலையுடைய நப்பின்னைப் பிராட்டியின் ஸ்தநங்களைமேலே வைத்துக்கொண்டு, அல்லது ஸ்தநங்களின்மேல் தன்னை அமர்த்திக்கொண்டு, சயநித்துக்கொண்டிருக்கிற விசாலவக்ஷஸ்தலத்தையுடையஸ்வாமீ, தேவரீர் திருவாய்திறந்து எம்மோடு ஒருவார்த்தை பேசவேண்டுமென, அதற்கு அவகாசங்கொடாத நப்பின்னைப்பிராட்டியைநோக்கி, மையெழுதி யலங்கரிக்கப்பட்டிருக்கிற நேத்ரங்களையுடைய ஓநப்பின்னைப்பிராட்டி! நீ உன்பர்த்தாவை ஒரு க்ஷணகாலமாகிலும் நித்ரையை விட்டெழுந்திருக்கச் சம்மதியாய், எவ்வளவு தாமதமாயினும் ஸ்ரீகண்ணபிரானைப் பிரிவதற்குச் சம்மதியாதவளாவாயானால், அது உனக்கு ஸ்வரூபமல்ல; தர்மமுமல்லவென்று சொல்லுகிறாரென்று தாத்பர்யம்.

முப்பத்துமூவ ரமரர்க்குமுன்சென்று
  கப்பந்தவிர்க்குங் கலியேதுயிலெழாய்
செப்பமுடையாய் திறலுடையாய்செற்றார்க்கு
  வெப்பங்கொடுக்கும் விமலாதுயிலெழாய்
செப்பன்னமென்முலைச் செவ்வாய்ச்சிறுமருங்குல்
  நப்பின்னைநங்காய் திருவேதுயிலெழாய்

உக்கமுந்தட்டொளியுந் தந்துன்மணாளனை
இப்போதேயெம்மை நீராட்டேலோரெம்பாவாய். (௨௰)

(அ-கை.) கண்ணபிரானை யெழுப்புதல்.

(இ-ள்.) முப்பத்துமூவர் - மூப்பத்துமூன்றுவகைப்பட்ட, அமரர்க்கு-தேவர்களுக்கு, முன்சென்று-முன்னேபோய், கப்பம்தவிர்க்கும் - அவர்களுடைய நடுக்கத்தைத் தீர்க்கின்ற, கலியே-வலிமையையுடையானே, துயிலெழாய் - நித்ரையை விட்டெழுந்திரு, செப்பம்உடையாய்-த்ரிகரணசுத்தியையுடையவனே! திறல்உடையாய் - வெற்றியையுடையவனே! செற்றார்க்கு-பகைவருக்கு, (ஆச்ரிதவிரோதிகளுக்கு) வெப்பம்கொடுக்கும் - தாபத்தைக்கொடுக்கிற, விமலா - நிர்மலனே, துயிலெழாய் - நித்ரையை விட்டெழுந்திரு, செப்புஅன்ன - செப்புக்களைப்போன்ற, மென்முலை - மெல்லிய ஸ்தநங்களையும், செவ்வாய் - செவந்த திருவதரத்தையும், சிறுமருங்குல் - சிற்றிடையையுமுடைய, நப்பின்னை-நப்பின்னையென்கிற திருநாமத்தையுடைய, நங்காய் - சுகுணகண பரிபூர்ணையே, திருவே - திருமகளே, துயிலெழாய் - நித்ரைவிட்டெழுந்திரு, உக்கமும் - ஆலவட்டத்தையும், தட்டொளியும்-வெண்கலக்கண்ணாடியையும், தந்து-கொடுத்து, உன்மணாளனை - உன்நாயகனையும், இப்போதே-இப்பொழுதே, எம்மை - எங்களையும், நீராட்டு - தீர்த்தமாட்டச்செய். (எ-று.)

முப்பத்துமுக்கோடிதேவர்களுக்குச் சம்பவிக்கிற ஆபத்துக்களை நீக்கும்பொருட்டு அவர்களுக்கெதிரே போய் அவர்களுடைய நடுக்கத்தைத் தீர்க்கின்றபலமுள்ளவனே! துயிலெழாய் என்றும், மநோவாக்காயங்



கள் ஏகீபவித்திருக்கிற சீலகுணமுள்ளவனே! எதிரில்லாத சாமர்த்தியமுள்ளவனே! ஆச்ரிதவிரோதிகளுக்குத் தாபஜ்வரத்தையுண்டாக்குகிற நிர்மலனே! நித்ரையை விட்டெழுந்திரு என்றும்இப்படி நாம் சொல்லாநிற்க, ப்ரத்யுத்தரம் ஒன்றுஞ்சொல்லாமலிருக்க, இனிப்பிராட்டியைக்கொண்டே காரியஞ்செய்வித்துக் கொள்ளவேண்டுமென்று நினைத்து, செப்புக்களுக்குச் சமானமான மெல்லியஸ்தநங்களையும், செந்திருவதரத்தையும், சிற்றிடையையும் உடைய, நப்பின்னையென்னுந் திருநாமமுள்ள ஒசுகுணகண பரிபூர்ணையே! திருமகளே! நீதுயிலெழாயென்று ஸ்துதிசெய்து, நீ எங்களுக்கு ஆலவட்டத்தையும் வெண்கலத்தட்டமாகிய கண்ணாடியையும் தந்துஇப்பொழுதே எங்களையும் உன்நாயகனையும் தீர்த்தமாட்டிச் சுகிக்கச்செய்யென்று ப்ரார்த்திக்கிறாரென்று தாத்பர்யம்.

ஏற்றகலங்களெதிர்பொங்கிமீதளிப்ப
மாற்றாதேபால்சொரியும் வள்ளல்பெரும்பசுக்கள்
ஆற்றப்படைத்தான் மகனேயறிவுறாய்
ஊற்றமுடையாய் பெரியாயுலகினில்
தோற்றமாய்நின்ற சுடரேதுயிலெழாய்
மாற்றாருனக்கு வலிதொலைந்துன்வாசற்கண்
ஆற்றாதுவந்துன் னடிபணியுமாபோலே
போற்றியாம்வந்தோம் புகழ்ந்தேலோரெம்பாவாய் (௨௧)

(அ-கை.) இதுவுமது.

(இ-ள்.) ஏற்றகலங்கள் - பாலையேற்றபாத்திரங்கள், எதிர்பொங்கி - எதிர்த்துப்பொங்கி, மீது அளிப்ப - மேலே வழியும்படி, மாற்றாதே-இடைவிடாமல், பால்சொரியும் - பாலைப்பொழிகின்ற, வள்ளல்-

ஔதார்யமுள்ள, பெரும்பசுக்கள் - பெரிய பசுக்களை, ஆற்ற-ஸம்ருத்தியாக, படைத்தான்-படைத்தவனாகிய, நந்தகோபாலன் - நந்தகோபனுடைய, மகனே - புத்ரனே! அறிவுறாய் - துயிலுணர்வாயாக, ஊற்றம் உடையாய் - நிலைபேறுடையவனே! பெரியாய் - பெரியோனே! உலகினில்-லோகத்தில், தோற்றமாய்நின்ற-சக்ஷுர்விஷயமாய் அவதரித்த, சுடரே - தேஜோரூபனே! துயிலெழாய் - துயிலுணர்வாயாக, உனக்குமாற்றார் - உனக்குப்பகைவரானவர்கள், வலிதொலைந்து-வலியழிந்து, உன்வாசற்கண் - உன்முற்றத்தில், ஆற்றாதுவந்து - சஹிக்கமாட்டாமல்வந்து, உன் அடி-உன் திருவடியை, பணியுமாபோலே - ஆச்ரயிப்பதுபோலவே, யாம் - நாங்களும், புகழ்ந்து-உன் கல்யாணகுணங்களைக் கீர்த்தித்து, போற்றி - மங்களாசாஸநம் பண்ணிக்கொண்டு, வந்தோம்-வந்திருக்கிறோம். (எ - று.)

பாலையேற்ற பாத்ரங்கள் எல்லாம்நிறைந்து வழியும்படி பாலைச்சொரிகின்ற ஔதார்யமுள்ள பெரியபசுக்களை மிகுதியாகவுடைய நந்தகோபாலன்மகனே! எழுந்திருஎன்றும், நிலைபேறுடையவனே! வேதப்ரதிபாத்யனாகியமேலோனே! லோகத்தில் சக்ஷுர்விஷயமாயவதரித்ததேஜோரூபனே! நித்ரைவிட்டெழுந்திருஎன்றும், உனக்குப்பகைவரானவர்கள் உன் எதிர்நிற்கமாட்டாமல் தோற்று, சஹிக்கமாட்டாமல் மறுபடியும் உன் சந்நிதிக்குவந்து உன் திருவடியை ஆச்ரயிப்பவர்போலே நாங்களும் உன் கல்யாணகுணங்களைக் கீர்த்தித்து மங்களாசாஸநம் செய்யும்பொருட்டு வந்தோமென்று கோதைநாயகியார் நப்பின்னைப்பிராட்டியையும் தமது கோஷ்டியில் சேர்த்துக்கொண்டு, ஸ்ரீகண்ண



பிரான் ஸந்நிதிக்குவந்து விண்ணப்பம் செய்கிறாரென்று தாத்பர்யம்.

அங்கண்மாஞாலத் தரசரபிமான
பங்கமாய்வந்துநின் பள்ளிக்கட்டிற்கீழே
சங்கமிருப்பார்போல் வந்துதலைப்பெய்தோம்
கிங்கிணிவாய்ச்செய்த தாமரைப்பூப்போலே
செங்கண்சிறிச்சிறிதே யெம்மேல்விழியாவோ
திங்களுமாதித் தியனுமெழுந்தாற்போல்
அங்கணிரண்டுங்கொண் டெங்கள்மேல்நோக்குதியேல்
எங்கள்மேற்சாப மிழிந்தேலோரெம்பாவாய். (உஉ)

(அ - கை.) கண்ணபிரானைப் பிரார்த்திப்பது.

(இ - ள்.) அம்கண் - அழகாகிய இடங்களுள்ள, மா - பெரிய, ஞாலத்து - பூமியில், அரசர் - அரசர்கள், அபிமானபங்கமாய் - அபிமானசூந்யராய், வந்து - வந்து, நின் - உன்னுடைய, பள்ளிகட்டில்கீழே-சயநமமைந்த கட்டிலின்கீழ், சங்கம் இருப்பார்போல் வந்து - கூட்டமாயிருப்பவர் போலவந்து, தலைப்பெய்தோம் - சேர்ந்தோம், கிங்கிணிவாய்செய்த - சிறுசதங்கைவாய் போலேவிகசித்த, தாமரைப்பூப்போலே-தாமரைமலர்போலவே, செங்கண் - செவந்ததிருக்கண்களாலே, சிறிச்சிறிதே - கொஞ்சம் கொஞ்சமாக, எம்மேல் - எங்கள்மீது, விழியாவோ - ப்ரஸரிக்கப்பண்ணமாட்டாயோ? திங்களும் - சந்திரனும், ஆதித்தியனும்-சூரியனும், எழுந்தாற்போல்-உதித்ததுபோல், அங்கண் - அழகிய கண்கள், இரண்டுங்கொண்டு - இரண்டையுங்கொண்டு, எங்கள்மேல்-எங்கள்மீது, நோக்குதியேல் - கடாக்ஷிப்பாயானால், எங்கள்மேல் - எங்கள்மீதுள்ள, சாபம் - பாபம், இழிந்து-நசிக்கும். (எ-று.)

ஓ ஸ்வாமீ! மஹாப்ருதிவியிலிருக்கிற அரசர்கள் அபிமானத்தை விட்டுவந்து, தேவரீருடைய திருக்கட்டிலின் கீழே கூட்டங்கூடி யிருப்பதுபோலவே, நாங்களும் உன் சந்நிதிக்குள் வந்து சேர்ந்தோம். ஆகையால், சிறு சதங்கையின் வாய்போல மலர்ந்து செந்தாமரை மலர்போல் விளங்குகிற நேத்ரங்கள் கொஞ்சம் கொஞ்சமாய் எங்கள்மேல் ப்ரஸரிக்கப் பண்ணலாகாதோ? சந்த்ர ஸூர்யர்கள் உதித்தாற்போலிருக்கிற அழகாகிய நேத்ரங்களிரண்டினாலும் எங்களைக் கடாக்ஷிப்பாயானால் எங்கள் மீதுள்ள சாபம் விலகிப் போகுமல்லவா வென்று ஸ்ரீ கண்ணபிரானைப் ப்ரார்த்திக்கிறாரென்று தாத்பர்யம்.

மாரிமலைமுழைஞ்சில் மன்னிக்கிடந்துறங்கும்
சீரியசிங்க மறிவுற்றுத்தீவிழித்து
வேரிமயிர்பொங்க வெப்பாடும்பேர்ந்துதறி
மூரிநிமிர்ந்து முழங்கிப்புறப்பட்டுப்
போதருமாபோலேநீ பூவைப்பூவண்ணாவுன்
கோயில்நின்றிங்ஙனே போந்தருளிகோப்புடைய
சீரியசிங்காசனத் திருந்துயாம்வந்த
காரியமாராய்ந் தருளேலோரெம்பாவாய். (உங)

(அ - கை.) இதுவுமது.

(இ - ள்.) மாரி - வர்ஷாகாலத்தில், மலைமுழைஞ்சில் - மலைக்குகையில், மன்னிக்கிடந்து - அமைதியாய்ப்படுத்து, உறங்கும் - நித்திரை செய்கிற, சீரிய சிங்கம் - மேன்மையான சிங்கம், அறிவுற்று - அறிவுணர்ந்து, தீவிழித்து - நெருப்புப்போல் விழித்து, வேரி - வாசனையோடுகூடின, மயிர்பொங்க - பிடர்மயிர் பொடிக்க, எப்பாடும் - எந்தப் பக்கத்திலும், பேர்ந்து - சரீரத்தை வளைத்து, உதறி - தூளியை



உதறிக்கொண்டு, மூரி - நிமிர்ந்து, நிமிர்ந்து-சரீரம் ஒன்றாகநீண்டு, முழங்கி - கர்ஜித்து, புறப்பட்டு - வெளிப்பட்டு, போதருமாபோலே - வருவதுபோலே, நீ - நீ, பூவைப்பூவண்ணா - காயாம்பூ நிறத்தையுடையவனே! உன் - உன்னுடைய, கோயில்நின்று - சயனக்ருஹத்திலிருந்து, இங்ஙனே இந்த மணிமண்டபத்துக்கு, போந்தருளி - எழுந்தருளி, கோப்புடைய - ஜயப்ரதமான, சீரிய - சிறப்பான, சிங்காசனத்து - ஸிம்ஹாசனத்தில், இருந்து - வீற்றிருந்து, யாம்-நாங்கள், வந்த - வந்த, காரியம் - காரியத்தை, ஆராய்ந்து-விசாரித்து, அருள் - க்ருபை செய்யவேண்டும். (எ - று.)

காயா மலர்போலக் கறுத்த திருமேனி நிறமுள்ள ஸ்வாமீ! வர்ஷாகாலத்தில், மலைக்குகையில் அமைதியாகப்படுத்திருக்கிற சிங்கம் விழித்துக்கொண்டு, அக்நி ஜ்வாலைபோன்ற பார்வைகளோடு, நான்கு திக்கிலும் பார்த்துக்கொண்டே அவயவங்களை அசைத்துக்கொண்டு, பையநிமிர்ந்து நீண்டு கர்ஜித்து வெளிப்பட்டு வருவது போலவே, நீயும் உன் பள்ளியறையிலிருந்து இந்த மணிமண்டபத்துக்கு எழுந்தருளி, வெற்றியுள்ள திவ்ய ஸிம்ஹாஸநத்தில் உட்கார்ந்து, நாங்கள் வந்த காரியத்தை விசாரித்து, க்ருபை செய்வாயாக வென்று ப்ரார்த்திக்கிறாரென்று தாத்பர்யம்.

அன்றிவ்வுலக மளந்தாயடிபோற்றி
சென்றங்குத்தென்னிலங்கை செற்றாய்திறல்போற்றி
பொன்றச்சகட முதைத்தாய்புகழ்போற்றி
கன்றுகுணிலா வெறிந்தாய்கழல்போற்றி
குன்றுகுடையா வெடுத்தாய்குணம்போற்றி
வென்றுபகைகெடுக்கும் நின்கையில்வேல்போற்றி
என்றென்றுன்சேவகமே யேத்திப்பறைகொள்வான்
இன்றியாம்வந்தோ மிரங்கேலோரெம்பாவாய். (உச)

(அ - கை.) மங்களாசாஸனஞ் செய்தல்.

(இ - ள்.) அன்று - வாமநாவதார காலத்தில் (மஹாபலியினிடத்துக்கு வாமநமூர்த்தியாய் இரக்கப் போனபோது) இவ்வுலகம் - இந்த லோகத்தைத் அளந்தாய் - அளந்தருளின ஸ்வாமீ! அடி - உன் திருவடிகள், போற்றி மங்களமாயிருக்கக்கடவன, அங்கு - அந்தஸ்தலத்தில் (ராவணக்ருஹத்தில்) சென்று - பிரவேசித்து, தென் இலங்கை - தென்னிலங்கையை, செற்றாய் - அழித்தவனே! திறல் உன்வெற்றிக்கு, போற்றி - மங்களாசாஸநம், பொன்ற - நசிக்கும்படி, சகடம் - சகடாசுரனை, உதைத்தாய் - உதைத்தவனே! புகழ் - உன் கீர்த்திக்கு, போற்றி - மங்களாசாஸநம், கன்று - கன்றை, குணில் ஆ - குறுந்தடியாய்க்கொண்டு, எறிந்தாய் - எறிந்தவனே! கழல் - உன் திருவடிகளுக்கு, போற்றி - மங்களாசாஸநம், குன்று - கோவர்த்தந மலையை, குடையா எடுத்தாய் - குடையாகத் தாங்கினவனே, குணம் உன் கல்யாணகுணங்களுக்கு, போற்றி - மங்களாசாஸநம், வென்று - ஜெயித்து, பகை - பகைவரை, கெடுக்கும் - அழித்த, நின் - உனது, கையில் - திருக்கையிலுள்ள, வேல் வேலாயுதத்துக்கு, போற்றி - மங்களாசாஸநம், என்றென்று - இப்படி சொல்லிச்சொல்லி, உன் சேவகமே - உன் வீரசரித்ரத்தையே, ஏத்தி - கொண்டாடி, பறை - புருஷார்த்தத்தை, கொள்வான் - அடையும்பொருட்டு, இன்று - இன்றைக்கு, யாம் - நாங்கள், வந்தோம் - வந்தோமாகையால், இரங்கு - க்ருபை செய்வாயாக (எ - று.)



மேற்பாசுரத்தில் ஸ்ரீகண்ணபிரானை, நோக்கி நீ ஸிம்ஹாஸநத்தில் எழுந்தருளி யிருந்து, நாங்கள் வந்த காரியத்தை விசாரித்து க்ருபை செய்யவேண்டுமென்று ப்ரார்த்திக்க, அவனும் அப்படியே எழுந்தருளி யிருக்கும்போது, அவனது திருவடியைக்குறித்தும், திவ்யமான வீரசரித்ரத்தைக்குறித்தும், கல்யாணகுணங்களைக்குறித்தும், திருக்கையிலிருக்கிற திவ்யாயுதங்களைக்குறித்தும், கோதைநாயகியார்மற்றை கோபிகைகளோடு கூடி மங்களாசாஸநம் பண்ண, அவனும் உங்களுக்கு வேண்டியதென்னென்று கேட்க, புருஷார்த்தத்தை லபிக்கைக்காக வந்து உன் சந்நிதியையடைந்தோம். ஆகையால் எங்கள்மநோரதத்தை நிறைவேற்றி யருளவேண்டுமென்று ப்ரார்த்தித்தாரென்று தாத்பர்யம்.

ஒருத்திமகனாய்ப் பிறந்தோரிரவில்
    ஒருத்திமகனா யொளித்துவளரத்
தரிக்கிலானாகித் தான்றீங்குநினைந்த
    கருத்தைப்பிழைப்பித்துக் கஞ்சன்வயிற்றில்
நெருப்பென்னநின்ற நெடுமாலேயுன்னை
    அருத்தித்துவந்தோம் பறைதருதியாகில்
திருத்தக்கசெல்வமுஞ் சேவகமும்யாம்பாடி
    வருத்தமுந்தீர்ந்து மகிழ்ந்தேலோரெம்பாவாய். (உரு)

(இ - ள்.) ஒருத்தி - ஒப்பற்ற தேவகிப்பிராட்டிக்கு, மகனாய்ப்பிறந்து - பிள்ளையாய்த் திருவவதரித்து, ஓர் இரவில் - அந்த இரவிலேதானே, ஒருத்தி - அத்விதீயையான யசோதைப் பிராட்டிக்கு, மகனாய் - திருமகனாக, ஒளித்துவளர - ஒளித்துக்கொண்டு வள.

ரும்போது, தரிக்கிலாகி - பொறுக்கமாட்டாதவனாய், தான் - தான், தீங்குநினைந்த - கெடுதியை நினைத்த, கருத்தை - அபிப்பிராயத்தை, பிழைப்பித்து-நசிக்கப்பண்ணி, கஞ்சன் வயிற்றில்-கம்ஸனது கர்ப்பத்தில், நெருப்பென்ன நெருப்பைப்போல, நின்ற-நிலைத்துநின்ற, நெடுமாலே - வ்யாமோஹஸ்வரூபனே, உன்னை - உன்னை, அருத்தித்து - புருஷார்த்தத்தை யாசித்து, வந்தோம் - வந்திருக்கிறோம், பறை-நாங்கள் விரும்பின புருஷார்த்தத்தை, தருதியாகில்-கொடுப்பாயானால், திருத்தக்க செல்வமும் - பிராட்டியும் விரும்பத்தகுந்த செல்வத்தையும், சேவகமும் - வீரத்தையும், யாம்பாடி-நாங்கள் கீர்த்தித்து, வருத்தமும்-எங்களுடைய சிரமத்தையும், தீர்ந்து - நீங்கப்பெற்று, மகிழ்ந்து - சந்தோஷிக்கக் கடவோம். (எ - று.)

ஓ ஸ்வாமீ! ஒரிரவிலேதானே அத்விதீயையான தேவகிபிராட்டிக்குப் புத்ரனாய்த் திருவவதரித்து, யசோதைப்பிராட்டிக்குப்புத்ரனாகிமறைந்துவளரும்போது, சஹிக்காதவனாய் உன் விஷயத்தில் கெடுதிநினைந்த கம்ஸனுடைய அபிப்பிராயத்தைவீணாக்கி அவன்கர்ப்பத்தில் நெருப்புப்போல வ்யாபித்திருந்த வுன்னையாசிக்கவந்தோம். ஆகையால் எங்களுக்கு வேண்டியபுருஷார்த்தத்தை க்ருபை செய்வாயானால், நாங்கள் பிராட்டியும் விரும்பத்தகுந்த உன் செல்வத்தையும் வீரத்தையும் பலதரம் கீர்த்தித்து, எங்களுடைய வருத்தம் நீங்கிச் சந்தோஷிக்கக்கடவோமென்று ஸ்ரீ கண்ணபிரானது சந்நிதியில் விண்ணப்பஞ் செய்கிறாரென்று தாத்பர்யம்.



மாலேமணிவண்ணா மார்கழிநீராடுவான்
மேலையார்செய்வனகள் வேண்டுவனகேட்டியேல்
ஞாலத்தையெல்லாம் நடுங்கமுரல்வன
பாலன்னவண்ணத்துன் பாஞ்சசன்னியமே
போல்வனசங்கங்கள் போய்ப்பாடுடையனவே
சாலப்பெரும்பறையே பல்லாண்டிசைப்பாரே
கோலவிளக்கே கொடியேவிதானமே
ஆலினிலையா யருளேலோரெம்பாவாய். (உசு)

(இ - ள்.) மாலே - ஆச்ரித விஷயத்தில் வ்யாமோஹமுள்ளவனே! மணிவண்ணா - இந்த்ரநீலமணி நிறத்தையுடையவனே! ஆலின் இலையாய் - வடபத்ரசாயீ! மார்கழிநீராடுவான் - மார்கழி நீராடும்பொருட்டுவந்தோம். மேலையார் - முன்னோர்களுடைய, செய்வனகள் - அநுஷ்டானங்கள், வேண்டுவன - வேண்டுமவற்றை, கேட்டியேல் - கேட்பாயானால், ஞாலத்தையெல்லாம் - உலகமுழுதும், நடுங்க - நடுங்கும்படி, முரல்வன-சப்திப்பனவாய், பால் அன்னவண்ணத்து-பால்போன்ற நிறத்தை யுடையனவாய், உன்பாஞ்சசந்நியம் போல்வன-உனது பாஞ்சஜந்யத்தை யொத்தனவான, சங்கங்கள் - சங்கங்களும், போய்ப்பாடுஉடையன-பேரிடமுடையனவாய், சாலப்பெரும்பறை-மிகப்பெரியவாத்யங்களும், பல்லாண்டு இசைப்பார் - பல்லாண்டுபாடுவோரும், கோலவிளக்கு - மங்கலதீபங்களும், கொடி - த்வஜங்களும், விதானம் - மேல்கட்டிகளும், அருள் - க்ருபை செய்தருளவேணும். (எ-று.)

மேலும் ஸ்ரீ கண்ணபிரான் கோபிகைகளை நோக்கி, நீங்கள் இங்குவந்த காரியம் யாதென, நாங்கள்

மார்கழிநீராடும் பொருட்டாகவும் நோன்புநோற்கும் பொருட்டாகவும் வந்தோம் என்று சொல்ல, இதற்கு ப்ரமாணம் ஏதாகிலுமுண்டோவென்று ஸ்ரீகண்ணபிரான் கேட்க, இந்த்ரநீல மணிநிறமுள்ளவனே! ஆச்ரித வ்யாமோஹனே! எங்கள் முன்னோர் அநுஷ்டித்த ப்ரகாரங்களைக்கேட்பாயானால், சொல்லுகிறோம், கேள் என்று உடன்படுத்திக்கொண்டு உலகமுழுதும் நடுங்கும்படி த்வனிக்கிறதாய், வெண்ணிறமுள்ளதாய், உன் திருக்கரத்திலிருக்கிற பாஞ்சஜந்யம்போலவேவிசேஷ ஸந்நிவேசமுள்ள சில சங்கங்களையும் மிகப்பெரிய ஓசையையுடைய வாத்யவிசேஷத்தையும், திருப்பல்லாண்டு பாடுவோரையும், மங்களதீபங்களையும், த்வஜங்களையும், விதாநத்தையும், ஓவடபத்ரசாயி! இவையெல்லாவற்றையும் எங்களுக்குக் குறைவில்லாமல் க்ருபை செய்யவேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோ ரென்று தாத்பர்யம்.

கூடாரைவெல்லுஞ்சீர்க் கோவிந்தாஉன்றன்னைப்
  பாடிப்பறைகொண்டு யாம்பெறுசம்மானம்
நாடுபுகழும் பரிசினால்நன்றாக
  சூடகமேதோள்வளையே தோடேசெவிப்பூவே
பாடகமேயென்றனைய பல்கலனும்யாமணிவோம்
  ஆடையுடுப்போ மதன்பின்னேபாற்சோறு
மூடநெய்பெய்து முழங்கைவழிவாரக்
  கூடியிருந்து குளிர்ந்தேலோரெம்பாவாய். (உஎ)

(இ-ள்.) கூடாரை - பகைவரை, வெல்லும் - ஜெயிக்கின்ற, சீர் - வீரச்சிறப்பினையுடைய, கோவிந்தா - கோவிந்தனே! உன்றன்னை - உன்னை, பாடி - கீர்த்தித்து, பறைகொண்டு - ப்ராப்யத்தைப் பெற்று, யாம் பெறுசம்மானம் - நாங்கள் பெறும்படியான சம்மானமானது, நாடுபுகழும் பரிசினால், நாட்டார் புகழும்படியான தன்மையினால், சூடகம் - முன்கையணியாகிய சூடகம், தோள்வளை - தோளணியான பாஹுவலயம், தோடு - காதணியாகியதோடு, செவிப்பூ - கர்ணப்பூ, பாடகம - காலணியாகியபாடகம், என்றனைய - என்பவைகளை, (நீயும் பிராட்டியுமாக இருந்து பூட்ட) யாம் நன்றாக அணிவோம் - நாங்கள் செவ்வையாய்த் தரிப்போம், ஆடை உடுப்போம் - திருப்பரியட்டங்களை உடுப்போம், அதன்பின்னே - அதன்பிறகு, பாற்சோறு மூட - பாலன்னம் மறையும்படி, நெய்பெய்து - நெய்யைப்பரிமாறி, முழங்கைவழிவார - முழங்கையின் வழியாய் வழியும்படி, கூடியிருந்து - நீயும் நாங்களும் கலந்திருந்து, குளிர்ந்து - சுகிக்கவேணும். (எ-று.)

பகைவரை வெல்லும்படியான கல்யாணகுணங்களையுடையகோவிந்தனே! உன்னைத்துதித்துப்பறையைப்பெறும்படியான சம்மாநமாவது, பஹுமானத்தால் தேசமுழுதும் துதிக்கும்படி திருக்கையில் தரிக்கும்படியான ஆபரணங்களும், தோளணிகளும், கர்ணாபரணங்களும், கர்ணபத்ரங்களும், பாதஜாலங்களும், இவைமுதலாயுள்ள திருவாபரணங்களெல்லாம் தேவரீர்ப்ரஸாதித்தால், அலங்கரித்துக்கொள்வோம்; ஆடையையுடுத்துக்கொள்வோம்; அதன்பிற

கு, பால்சோருனது, முழுகும்படி நெய்வார்த்து,முன்கைவழியாகவழியும்படி தேவரீரோடு கூடியிருந்து, எங்களுடைய தாபம் பாறும்படி அநுபவிக்கவேண்டுமென்று அபேக்ஷிக்கிருரென்று தர்ப்பர்யம்.

கறவைகள்பின்சென்று கானஞ்சேர்ந்துண்போம்
அறிவொன்றுமில்லாத வாய்க்குலத்துன்றன்னைப்
பிறவிபெறுந்தனைப் புண்ணியம்நாமுடையோம்
குறைவொன்றுமில்லாத கோவிந்தாவுன்றன்னேடு
உறவேல்நமக்கிங் கொழிக்கவொழியாது
அறியாதபிள்ளைகளோ மன்பினுலுன்றன்னைச்
சிறுபேரழைத்தனவுஞ் சீறியருளாதே
இறைவாநீதாராய் பறையேலோரெம்பாவாய். (உஅ)

(இ - ள்.) கறவைகள் பின்சென்று - கறவைப்பசுக்களின்பின்னேபோய், கானம்சேர்ந்து- காட்டையடைந்து, உண்போம் - சரீரபோஷணம் பண்ணித்திரிவோமாகிய,ஒன்றும் அறிவு இல்லாத-சிறிதும்விவேகமில்லாத, ஆய்க்குலத்து - கோபகுலத்திற்பிறந்த, நாம் - நாங்கள், உன்றன்னை- உன்னை, பிறவிபெறுந்தனை - ஸஜாதியனுய்ப் பிறப்பிக்கத்தகுந்த, புண்ணியம் - புண்யத்தை, நாமுடையோம்-யாங்கள்உடையோமாயிராநின்ருேம், குறைவுஒன்றும் இல்லாதகோவிந்தா-சிறிதும் குறைவில்லாத கோவிந்தனே! இறைவா - ஸர்வஸ்வாமியானவனே! உன்றன்னேடு உறவு- உன்னேடு எங்களுக்குண்டான சம்பந்தம், இங்கு-இங்



கே, நமக்கு ஒழிக்கஒழியாது - உன்னுலும் எங்களாலும் ஒழிக்கக்கூடாது, அறியாத - உலகவழக்கத்தையறியாத, பிள்ளைகளோம் - பாலிகைகளான நாங்கள், அன்பினுல் - உன்னிடத்துண்டான அன்பினுலே, உன்றன்னை-உன்னை, சிறுபேர் அழைத்தனவும் - சிறிய பேராலே அழைத்ததற்குயித்தும், சீறியருளாது-கோபித்தருளாமல், நீ-விலக்காமைபார்த்திருக்கும் நீ, பறைதாராய் - எங்கள் அபேக்ஷிதத்தைத் தந்தருளவேணும். (எ - று.)

ஒருகுறைவுமில்லாத கோவிந்தனே! தேவரீருக்கும் இஷ்டமென்று நாராயணுவென்கிற பூர்வநாமத்தைக்கொண்டு எங்கள் அன்பின்மிகுதியால் உன்னையழைத்தோம் ஆசையால் எங்கள்மேலுள்ளகோபத்தைவிடவேண்டுமென்றும், பசுக்களின்பின்னே போய்க்காட்டில் பிரவேசித்து, அன்னத்தை புஜிக்கிறவர்களென்றும், அவ்வளவேயல்லாமல் அறிவு சிறிதுமில்லாத ஆயர்குலத்திற்பிறந்த பேதைப்பெண்களென்றும்; ஆனுலும், இக்குலத்திலேதானே தேவரீரது அவதாரம் லபித்தலால் புண்யத்தையுடையவர்களானேம் என்றும், உனக்கும் எங்களுக்கும் உண்டாயிருக்கிற ஸ்வாபாவிக சம்பந்தம்நீங்காதென்றும்சொல்லி, எங்களுக்குவேண்டிய புருஷார்த்தத்தை, ஸர்வஸ்வாமியானநீயே க்ருபைசெய்ய வேணுமென்றும் கோதை நாயகியார் கோஷ்டியோடு கூடிப்ப்ரார்த்திக்கிருரென்று தாத்பர்யம். (எ - று.)

சிற்றஞ்சிறுகாலே வந்துன்னைச்சேவித்துன்
பொற்றாமரையடியே போற்றும்பொருள்கேளாய்
பெற்றம்மேய்த்துண்ணுங் குலத்திற்பிறந்துநீ
குற்றேவலெங்களைக் கொள்ளாமற்போகாது
இற்றைப்பறைகொள்வா னன்றுகாண்கோவிந்தா
எற்றைக்குமேழேழ் பிறவிக்குமுன்றன்னோடு
உற்றோமேயாவோ முனக்கேநாமாட்செய்வோம்
மற்றைநங்காமங்கள் மாற்றேலோரெம்பாவாய்.

(இ - ள்.) சிற்றம்சிறுகாலே - அத்யந்தம்ப்ராதக்காலத்திலே, வந்து - நீவாவிருக்குக்கடவோமாகிய நாங்கள்வந்து, சேவித்து - உன்னைவணங்கி, உன் - தேவரீருடைய, பொன் - அழகாகிய, தாமரை - செந்தாமரைமலர்போன்ற, அடி - திருவடிகளை, போற்றும் பொருள் - மங்களாசாஸநம் பண்ணுகைக்கு அபிப்ராயத்தை, கேளாய் - கேட்டருளவேணும், பெற்றம் - பசுக்களை, மேய்த்து - வயிறாரமேய்த்து, உண்ணும் குலத்தில் - பின்புதாம் உண்ணுகின்ற ஆயர்குலத்தில், பிறந்த நீ - திருவவதரித்ததேவரீர், குற்றேவல் - அந்தரங்ககைங்கர்யங்கள், எங்களை - தேவரீரை யொழிய வேறுரக்ஷகரில்லாத எங்களால், கொள்ளாமல் போகாது - திருவுளம்பற்றியருளாமல் போகக்கூடாது, கோவிந்தா - இடைக்குலத்துக்கு ரக்ஷகனானவனே! இன்று - இன்றைக்கு, பறைகொள்வான் அன்றுகாண் - ஒருப்ரயோஜனத்தைக்கொண்டுபோகவந்தவர்களல்லகாண்நாங்கள், எற்றைக்கும் - காலமுள்ளளவும், ஏழேழ்பிறவிக்கும் - தேவரீரோடு எக்காலத்திலும் ; உற்றோமே ஆவோம் - அநந்யார்ஹைகளா யிருக்கவேணும், உனக்கே - தேவரீருக்கே, நாம் ஆட்செய்வோம் - நாங்கள் அடிமை செய்யவேணும், நம் - எங்களுடைய, மற்றைக் காமங்கள் - மற்ற அபிப்ராயங்களை, மாற்று - தவிர்த்தருளவேணும் (எ - று.)



மேற்பாசுரங்களில் ஸ்ரீகோதைநாயகியார் அபேக்ஷித்துக்கொண்டுவந்த புருஷார்த்தத்தை ஸ்ரீகண்ணபிரான் கொடுத்தருள, ஓ கோவிந்தனே! கேட்டருளவேண்டுமென்றுடம் படுத்தி, அத்யந்தம் ப்ராதக்காலத்தில் தேவரீரைச்சேவித்து, மங்களாசாஸநம் பண்ணின எங்களுடைய அபிப்ராயம் இந்தப்பறையைலபிக்கையல்ல, என்றும், பசுக்களையேதாரகமாய் மேய்த்து, ஜீவநம்செய்கிற ஆயர்குலத்தில் திருவவதரித்ததேவரீருடைய அந்தரங்ககைங்கர்யங்களைக்கொடுத்து, எங்களை அங்கீகரித்தருளவேண்டுமென்றும், எல்லாக்காலங்களிலும் எத்தனை ஜந்மங்களெடுத்தாலும் தேவரீருடையசம்பந்தமுள்ளவர்களாய் தேவரீருடைய கைங்கர்யவ்ருத்தியிலேயே வர்த்தித்துக்கொண்டிருக்கும்படி, ஸங்கல்பிக்கவேண்டுமென்றும் அதற்கு அந்யமான எங்களுடைய அபிப்ராயங்களைப் போக்கவேண்டுமென்றும் விண்ணப்பம் செய்கிறாளென்று தாத்பர்யம்.

வங்கக்கடல்கடைந்த மாதவனைக்கேசவனைத்
திங்கட்டிருமுகத்துச் சேயிழையார்சென்றிறைஞ்சி

அங்கப்பறைகொண்ட வாற்றையணிபுதுவைப், [ன
பைங்கமலத்தண்டெரியற் பட்டர்பிரான் கோதைசொன்
சங்கத்தமிழ்மாலை முப்பதுந்தப்பாமே,
இங்கிப்பரிசுரைப்பாரீரிரண்டுமால்வரைத்தோள்
செங்கட்டிருமுகத்துச் செல்வத்திருமாலால்
எங்குந்திருவருள் பெற்றின்புறுவரெம்பாவாய். (௩௰)

(இ-ள்.) வங்கக்கடல், கடைந்த - மரக்கலங்கள்சஞ்சரிக்கிறதிருப்பாற்கடலைக்கடைந்தருளின, மாதவனை - ஸ்ரீலக்ஷ்மீநாயகனை, கேசவனை - கேசியென்னும் அசுரனைச்சம்ஹரித்தஸர்வேசுவரனை, திங்கள் - பூர்ணசந்த்ரனை நிகர்த்த, திருமுகத்து - திருமுகமண்டலத்தையுடைய, சேயிழையார் - செவ்விதான ஆபரணாலங்காரத்தையுடைய கோபபாலிகைகள், சென்று இறைஞ்சி - போய் மங்களாசாஸநம்பண்ணி, அங்கு - திருவாய்ப்பாடியில், அ - ப்ரஸித்தமானதாய், பறை - நாட்டுக்குப் பறையென்றொருவியாஜத்தைமுன்னிட்டு, கொண்ட - அடிமைபெற்ற; ஆற்றை - வ்ருத்தாந்தத்தை, அணி - அழகிய, புதுவை - ஸ்ரீவில்லிபுத்தூரில் திருவவதரித்தவராய், பை - பசுமையான, தண் - குளிர்ச்சியுள்ள, கமலம் - தாமரை மலர்களால் தொடுக்கப்பட்ட, தெரியல் - மாலையையுடையவராய், பட்டர்பிரான் கோதைசொன்ன - ப்ராஹ்மணோத்தமரான பெரியாழ்வார் திருமகளாரான ஆண்டாள் அருளிச்செய்ததாய், சங்கம் - கோபஸ்த்ரீகள் திரளாய்க்கூடி அநுபவித்தப்ரபந்தமாய், தமிழ்மாலை - த்ராவிடமாய் மாலாரூபமான



முப்பதும் - முப்பதுபாசுரங்களையும், தப்பாமே - தப்பாமல், இங்கு இப்பரிசு உரைப்பார் - இந்தஸம்ஸாரத்திலே இந்தப்பாசுரமாத்ரத்தைச்சொல்லுவோர், மால்வரை - பெரியமலைகள் போன்று திண்ணிதாயிருந்துள்ள, ஈரிரண்டுதோள் - நான்கு திருத்தோள்களையும், செங்கண் - ஆச்ரிதர்பக்கல் வ்யாமோஹத்தால் சிவந்த திருக்கண்களையும்; திருமுகத்து - அழகிய திருமுகமண்டலத்தையும் உடையனாய், செல்வம் - உபய விபூதிகளாகிய ஐசுவரியத்தையுடையனாய், திருமாலால் - ஸ்ரீயப்பதியாகிய நாராயணனாலே, எங்கும் - த்ருஷ்டாத்ருஷ்டங்களிரண்டிலும், திருவருள் பெற்று - ஒப்பற்ற க்ருபையைப்பெற்று, இன்புஉறுவர் - ப்ரஹ்மாநந்தத்தை அடைவார்கள். (எ - று,)

திருவாய்ப்பாடியில் சந்த்ரபிம்பம்போன்றமுகத்தையுடைய கோபபாலிகைகள், மாதவனும் கேசவனுமான ஸ்ரீகண்ணபிரான் சந்நிதிக்குப்போய் தாம்பெற்ற புருஷார்த்த ப்ரகாரத்தைக் குறித்துப் பெரியாழ்வார் திருமகளாரான கோதைநாயகியார் த்ராவிடரூபமாய் அருளிச்செய்ததிருப்பாவையென்கிறஸ்ரீஸூக்திமாலிகையாகியமுப்பது பாசுரங்களையும் தவறாமல் இந்த லோகத்தில் அநுஸந்திப்பவர்கள்எவர்களோ, அவர்கள் ஸ்ரீயப்பதியினுடைய பரிபூர்ண க்ருபைக்குப் பாத்ரர்களாய், இஹபரலோகங்களில், ப்ரஹ்மாநந்தத்தை அடைவார்கள் என்று தாத்பர்யம்.

திருப்பாவை - ப்ரதிபததாத்பர்யம்.

முற்றிற்று.

## வாழித்திருநாமம்.

கோதைபிறந்தவூர் கோவிந்தன் வாழுமூர்
சோதிமணிமாடந்தோன்றுமூர்—நீதியால்
நல்லபத்தர்வாழுமூர் நான்மறைகளோதுமூர்
வில்லிபுத்தூர்வேதக்கோனூர்.

பாதகங்கள்தீர்க்கும் பரமனடிகாட்டும்
வேதமனைத்துக்கும் வித்தாகும்—கோதைதமிழ்
ஐயைந்துமைந்தும் அறியாதமானிடரை
வையஞ்சுமப்பதுவம்பு.

வேறு.

திருவாடிப்பூரத்திற்செகத்துதித்தாள்வாழியே
திருப்பாவைமுப்பதும் செப்பினாள்வாழியே
பெரியாழ்வார்பெற்றெடுத்த பெண்பிள்ளைவாழியே
பெரும்பூதூர்மாமுனிக்குப் பின்னானாள்வாழியே
ஒருநூற்றுநாற்பத்து மூன்றுரைத்தாள்வாழியே
உயரரங்கர்க்கேகண்ணி யுகந்தளித்தாள்வாழியே
மருவாருந்திருமல்லி வளநாடிவாழியே
வண்புதுவைநகர்க்கோதை மலர்ப்பதங்கள்வாழியே.

ஆண்டாள் திருவடிகளேசரணம்.

118160